பக்கங்கள் – 16
விலை – ரூபா 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 157
வெள்ளிக்கிழமை
02 மே 2025
சித்திரை 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**19 வருடங்கள் கடந்தும் கிட்டாத நீதி**
விரிவு பக்கம் 06

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## உயர்பாதுகாப்பு வலயத்தில் 40.7 ஏக்கர் காணி விடுவிப்பு!

**யாழ்ப்பாணம், மே 2**

**தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறைப் பகுதியில் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள 40.7 ஏக்கர் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன. இதற்குரிய ஆவணங்கள், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரிடம் யாழ். மாவட்டப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியால் கையளிக்கப்பட்டன.** 15

## திக்கத்தில் 14.5 ஏக்கர் காணி விரைவில் விடுவிக்கப்படும்

யாழ். மாவட்டச் செயலரிடம் கட்டளைத் தளபதி உறுதி

யாழ்ப்பாணம், மே 2
யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில், திக்கம் பகுதியில் இராணுவத்தின் பிடியிலுள்ள 14.5 ஏக்கர் காணிகள் விரைவில் விடுவிக்கப் 14

அரச வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள

## காணி ஆக்கிரமிப்புக்கு எதிராக ஏழு சட்டத்தரணிகள் களத்தில்

பொதுமக்கள் உதவியை நாடலாம்
ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 2
வடக்கு மாகாணத்தில் பொதுமக்கள் உரிமை கோராத பட்சத்தில், 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை அரச காணிகளாக பிரகடனப்படுத்த 14

## நல்லை ஆதீன முதல்வர் இறைவனடியில் சங்கமம்!



யாழ்ப்பாணம், மே 2
நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (வயது-68) நேற்று வியாழக்கிழமை இரவு இறைவன் கழல்களைச் சென்றடைந்தார். திடீர் உடல்நலக் குறைவு காரணமாக, கடந்த சில நாள்களாகக் கொழும்பில் சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்று இரவு இறைபதமெய்தினார். 15

## தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தியே தீருவேன்



மே தின உரையில் ஜனாதிபதி அநுர

கொழும்பு, மே 2
தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பாமல் எம்மால் முன்னோக்கிச்செல்ல முடியாது. தேசிய ஒற்றுமைக் 15

## தேர்தல் ஏற்பாடு யாழில் நிறைவு!

யாழ்ப்பாணம், மே 2
உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் யாழ்ப்பாணத்தில் நிறைவுக்கு வந்துள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் தெரிவத் 15

ஊழலற்ற தலைவரான

## சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்குவோம்

இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 2
ஊழலற்ற தலைவரான சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்குவோம். அவர் தலைமையில் நல்லாட்சியை உருவாக்குவோம். 15

## தமிழ்த் தேசியப் பேரவையை பலப்படுத்த ஒன்றிணையுங்கள்

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அழைப்பு



யாழ்ப்பாணம், மே 2
தமிழ்த் தேசியத்தை இன்று உயிர்ப்புடன் கொண்டுசெல்லும் தரப்பென்றால், அது தமிழ்த் தேசியப் பேரவையே. எனவே, தமிழ்த் தேசியப் பேரவையை பலப்படுத்தவேண்டியது இன்று காலத்தேவையாக உள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியப் பேரவையின் மேதின 15

## பொறுப்புடன் வாக்களிப்போம்

யாழில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், மே 2
'அன்பான வாக்காளரே, மூன்று கோமாளிகளும், ஒரு பைத்தியமும் போதும். இனிமேலாவது பொறுப்புடன் வாக்களிப்போம்...' என்றவாறு எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் யாழ்ப்பாணத்தில் பரவலாகக் காட்சிப் 15



**முச்சந்தி முரளி**

**'உவையள் இப்பிடி பகல் கனவு கண்டு அந்தாளின்ர எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் இல்லாமல் செய்யப்போயினமோ?'**

## கடற்றொழிலாளர்கள் மூவர் கடற்படையினரால் கைது!

பொதுமக்கள் எதிர்த்துப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 2
பலாலி அன்ரனிபுரத்திலிருந்து கடந்த செவ்வாய்கிழமை கடலுக்குச்சென்ற மூவரை கடற்படையினர் காரணமின்றி கைதுசெய்துள்ளனரெனத் தெரிவித்து கிராம மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-
தொழில் நிமித்தம் கடலுக்குச் சென்ற மீனவர்களை கடற்படையினர் 14

உள்ளூராட்சித் தேர்தல்

## அரசாங்கத்துக்கான சிவப்பு எச்சரிக்கை!

சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, மே 2
வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், அதற்கு மாறாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கத்துக்கான சிவப்பு எச்சரிக்கையாகவே உள்ளூராட்சித் தேர்தலை மக்கள் பயன்படுத்தவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 01.05.2025 | திகதி 01.05.2025 | திகதி 01.05.2025 | திகதி 01.05.2025 | திகதி 01.05.2025 | திகதி 01.05.2025 | திகதி 28.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4060 | சீட்டிழுப்பு இலக்கம் 1127 | சீட்டிழுப்பு இலக்கம் 0086 | சீட்டிழுப்பு இலக்கம் 2166 | சீட்டிழுப்பு இலக்கம் 5818 | சீட்டிழுப்பு இலக்கம் 1848 | சீட்டிழுப்பு இலக்கம் 0393 |
| ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கினம் ரிஷபம் | ஆங்கில எழுத்து F | ஆங்கில எழுத்து O | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து E |
| | | | சுப்பர் இலக்கம் 04 | | | |
| வெற்றி இலக்கங்கள் 16 45 55 57 | வெற்றி இலக்கங்கள் 06 29 33 40 | வெற்றி இலக்கங்கள் 3 3 2 0 | வெற்றி இலக்கங்கள் 09 33 39 76 | வெற்றி இலக்கங்கள் 3 4 1 2 5 6 | வெற்றி இலக்கங்கள் 51 64 70 82 | வெற்றி இலக்கங்கள் 1 2 5 6 |
| விசேட எழுத்து T | | | | | விசேட எழுத்து T | |

# தமிழ் இனத்தின் இருப்பைக் காக்க தமிழரசுக்கட்சியைப் பலப்படுத்துங்கள்

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாநகரசபை வேட்பாளர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மே 2**

**போலிக்கதைகளையும், போலி வாக்குறுதிகளையும் நம்பி ஏமார்ந்துவிடாது தடம்மாறாத ஒரே தமிழ்த் தேசியக் கொள்கையுடன் பயணிக்கவேண்டியது காலத்தின் தேவை. அது தவறின் எம் இனத்தின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும். எனவே இதனை உணர்ந்து உங்கள் வாக்குகளை வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழரசுக் கட்சிக்கு அளித்து எமது கரங்களைப் பலப்படுத்துங்கள்.**

இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் யாழ். மாநகரசபையின் வேட்பாளர் நிருஜா தர்சாந் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது இனத்திற்கென்று ஒரு வரலாறு, ஒரு தனித்துவம், ஒரு கொள்கை என்பன உள்ளன. எத்தனையோ வலிகளைக் கடந்து வந்த இனம் எம் இனம். போலி வாக்குறுதிகளுக்கு சோரம் போகின்றவர்கள் அல்ல எமது மக்கள்.

ஏனைய தேர்தல்கள் போன்றதல்ல உள்ளூராட்சிமன்றத் தேர்தல், எம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு தீர்மானங்களும் எவ்வளவு தாக்கத்தை எமது பிரதேசங்களில் ஏற்படுத்தும் என்பதனை உணர்ந்து மக்கள் எமக்கு வாக்களிப்பார்கள் என நம்புகின்றோம்.

பிழையான தெரிவுகள், நாளை எம் மண்ணில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும். நகர் மத்தியில் எம் மக்களின் உணர்வுகளைச் சிதைக்கும் வகையில் மாற்றங்கள் வரவும் முடியும், நாம் உணர்வுபூர்வமாக மதிக்கின்ற விடயங்கள் அழிக்கப்படவும் கூடும். வீதிகளின் பெயர்கள் கூட மாறலாம். தென்பகுதித் தீர்மானங்கள் எம்மீது திணிக்கப்படலாம். எனவே நாடு யாருடனும் இருக்கட்டும் நம் ஊர்கள் எம்முடன் இருக்கவேண்டும்.

யாழ் .மாநகரசபையைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைத்து செயற்படுத்தவிருக்கும் விடயங்கள் தொடர்பான தெளிவான திட்டவரைவு எம்மிடம் உள்ளது. அதுமட்டுமின்றி புலம்பெயர் முதலீட்டாளர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் எம்முடன் இருக்கின்றார்கள்.

எனவே எம்மை அடிமைப்படுத்த முற்படுபவர்களிடம் போலி வாக்குறுதிகளை நம்பி சோரம் போக வேண்டாம் - என்றார்.

(ச)

சுபிரி தன சம்பத
திகதி 01.05.2025 | தினம் வியாழக்கிழமை | வெற்றி வாரம் 0526
ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கம் 9 0 3 1 3 9

Super Ball
திகதி 01.05.2025 | தினம் வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2792 | ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கம் 16 33 48 72

சனிதா
திகதி 01.05.2025 | தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கம் 09 23 57 63 | வெற்றி வாரம் 4953

SASIRI
திகதி 01.05.2025 | தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0673 | வெற்றி இலக்கம் 06 24 39

லக்ன ராசி
திகதி 01.05.2025 | தினம் வியாழக்கிழமை
இடபம் | வெற்றி இலக்கம் 07 13 15 17 | சீட்டிழுப்பு வாரம் 4504

KAPRUKA
திகதி 01.05.2025 | தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து P | சுப்பர் இலக்கம் 38 | வெற்றி இலக்கம் 21 26 28 35 | வெற்றி வாரம் 1968

அத கோடிபதி
திகதி 01.05.2025 | தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கம் 11 26 29 72 | வெற்றி வாரம் 2618

# தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆட்சியமைப்பதே பாதுகாப்பு



## யாழ். வணிகர் கழகத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 2

உள்ளூராட்சிசபைகள் தமிழ்த்தேசியக் கட்சிகளின் ஆட்சியிலிருப்பதே தமிழ்மக்களுக்கும், தமிழ்ப் பிரதேசங்களுக்கும் பாதுகாப்பாக அமையும் என்று யாழ். வணிகர் கழகத் தலைவரும், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான இ.ஜெயசேகரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு தமிழர்களுடைய தாயகம். இங்கு நடைபெறும் உள்ளூராட்சிசபைத் தேர்தலோ, மாகாணசபைத் தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ தமிழ்த்தேசியத்தின்பால் பற்றுறுதி கொண்ட கட்சி உறுப்பினர்களை தெரிவுசெய்வதே தமிழ்மக்களுக்கு மொழி ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும், கலை கலாசாரப் பண்பாடு ரீதியாகவும் பாதுகாப்பாக அமையும். நில ஆக்கிரமிப்புச்செய்வது, குடியேற்றங்களை ஏற்படுத்துவது, கோவில்களை ஆக்கிரமிப்பது, வேலைவாய்ப்பைப் புறக்கணிப்பது, அபிவிருத்தியில் புறக்கணிப்பது, பாரபட்சமாக நடப்பது, சட்டத்தைச் சமனாகப் பயன்படுத்துவதில்லை போன்றவைதான் தென்னிலங்கையின் நிகழ்ச்சிநிரலாக நடந்துகொண்டிருக்கின்றது. இந்த நிலைமையில் தமிழர் உரிமைக்காகப் போராடும் தமிழ்க்கட்சிகளுக்கு வாக்களித்து உள்ளூராட்சிசபைகளின் ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைப்பதே தமிழ்மக்களுக்கு பாதுகாப்பானதாக அமையும். எமக்கான உரிமைகள் கிடைக்கும் வரையாவது ஒற்றுமையாக, கட்டுக்கோப்பாகச் செயற்படுவதே சிறந்த தெரிவாக அமையும் - என்றுள்ளது. (எ-66,125)

# உள்ளூராட்சித் தேர்தலில் சிந்தித்து வாக்களியுங்கள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 2

முள்ளிவாய்க்காலில் எமது மக்களைக் கொன்றொழிக்க உதவி புரிந்தது ஜே.வி.பி., தமிழ் மக்கள் சிந்தித்துத் தங்களது வாக்குகளை அளிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சித் தேர்தலில் பல கட்சிகள் பல சின்னங்களில் தங்களது கடைகளைத் திறந்துள்ளனர்.

வேட்பாளர்களில் மண்ணுக்கானவர்கள் யார் என்று பார்த்தால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான எங்களுடைய சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களே.

இறுதிப்போரின்போது இராணுவம் தாக்குதலை நிறுத்தக்கூடாது என்று அநுரகுமார, ரில்வின் சில்வா, வசந்த பண்டார, பிமல் ரத்நாயக்க தலைமையில் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கொலைகார ஜே.வி.பி. தற்போது வாக்குகளுக்காக என்.பி.பி. என்ற பெயரில் வந்திருக்கின்றது.

இனத்தைக் காப்பாற்றுவதற்காக எத்தனையோ தியாகங்களைச் செய்தது எமது இனம், இப்போது தவறி வாக்களித்தால் எங்கள் பிரதேசங்கள் எங்கும் விகாரைகள் முளைக்கும், உள்ளூராட்சி சபைகளும் அதற்கு ஆதரவளிக்கும்.

நாம் உள்ளூராட்சிசபைகளைக் கைப்பற்றினால் எமது மக்களின் அடிப்படைத் தேவைகளை நிச்சயமாக தமிழ்த் தேசியத்தை விட்டுக்கொடுக்காது நிறைவேற்றுவோம். எமது இனத்தைக் காப்பாற்றவேண்டிய தேர்தல் இது - என்றார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானியப் பயிர்ச்செய்கை அறுவடைக்குத் தயார்!

யாழ் . மாவட்டத்தில் விவசாயிகளால் முன்னெடுக்கப்படும் சிறுதானியப் பயிர்ச்செய்கை அறுவடைக்குத் தயாராகி வருவதாக யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் பலீஸ்வரி தெரிவித்துள்ளார்.

கடந்த போக நெற்பயிர்ச் செய்கையைத் தொடர்ந்து நிலத்தின் ஈரப்பதத்தைப் பயன்படுத்தி பயறு மற்றும் உளுந்து பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.


அதன்படி கடந்த பெப்ரவரி மாதம் ஆயிரத்து 540 விவசாயிகள் 100 ஏக்கரில் ஆயிரம் கிலோ பயறும், 287 ஏக்கரில் 2ஆயிரத்து 810 கிலோ உளுந்தும் விதைத்த நிலையில் தற்போது அவை அறுவடைப் பருவத்தை எட்டியுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)



## மேதினப் பேரணி...



வடக்கு மாகாண தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து நேற்று காலை 9 மணிக்கு ஆரம்பமான மேதின மோட்டார் சைக்கிள் பேரணி ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லி வீதியூடாக யாழ். நகரை அடைந்து யாழ்.மாவட்டச் செயல கத்துக்கு அருகிலுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நிறைவடைந்தது. (ச-125)



தொழிற்சங்கங்கள், வெகுஜன மற்றும் சிவில் அமைப்புகளுடன் இலங்கை ஆசிரியர் சங்கம் இணைந்து நடத்திய கூட்டு மே தினப்பேரணி நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பமான குறித்த பேரணி நகர் பகுதி ஊடாகப் பயணித்து யாழ்.பொதுநூலகம் முன்பாக நிறைவுபெற்றது. (ச-125,17)


# உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2025



வெற்றி நமதே
ஊர் எமதே

உள்ளூராட்சி மட்டங்களில் தன்னிறைவான
செயல் ஊக்கத்தினை கட்டமைக்க திசைகாட்டியுடன் பயணிப்போம்

தேசிய மக்கள் சக்தி
ජාතික ජන බලවේගය
JATHIKA JANA BALAWEGAYA (NPP)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** சற்றுச் சோர்வாக இருக்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பணியாளர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு வந்துசேரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராக இருக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். திடீர்ச்செலவுகள் மனதைச் சஞ்சலப்படுத்தும். முக்கிய முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும். அலுவலகத்தில் பணி நெருக்கடி குறையும். வியாபாரத்தில் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன்வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பணிச்சுமை இருந்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். நன்மை ஏற்படும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே காணப்படும்.

**மகரம்:** எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.


**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்துகொடுப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

# புள்ளிப்பட்டியலில் மும்பை முதலிடம்

## ராஜஸ்தானை வீழ்த்தியது

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தானை 100 ஓட்டங்களால் தோற்கடித்து புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்தது மும்பை.**



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக 61 ஓட்டங்களையும், ரோகித் 53 ஓட்டங்களையும், சூரியகுமார் யாதவ் 48 ஓட்டங்களையும், பாண்டியா 48 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணி ஓர் ஓட்டத்தைப் பெற்றிருந்த நிலையிலேயே முதலாவது விக்கெட்டை இழந்தது. கடந்த ஆட்டத்தில் சதம் விளாசிய 14 வயதேயான வைபவ் சூரியவன்ஷி நேற்று ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். மத்திய வரிசையில் ஆச்சர் பெற்ற 30 ஓட்டங்கள்தான் அதிகபட்சம். 117 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 100 ஓட்டங்களால் தோல்வியடைந்தது ராஜஸ்தான்.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் மும்பை அணி முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. மும்பை அணி இறுதியாக விளையாடிய ஆறு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 2

யாழ். வடகோவை மகிழடி உக்கிர வைரவர் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமாகின.

எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு நாளை சனிக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,17)



## யாழில் களைகட்டிய அட்சய திருதியை

யாழ்ப்பாணம், மே 2

அட்சய திருதியை நன்னாளான நேற்றுமுன்தினம் புதன்கிழமை தங்க நகைகளின் சடுதியான விலையேற்றத்துக்கு மத்தியிலும் யாழ். நகரில் அமைந்துள்ள நகைக் கடைகளில் தங்கநகை வியாபாரம் களைகட்டியிருந்தது.

யாழ். நகர் மட்டுமன்றி மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள பல நகரங்களிலும் நேற்றுமுன்தினம் நகை வியாபாரம் வழமையைவிட அதிகரித்துக் காணப்பட்டது. அட்சய திருதியை நாளை முன்னிட்டு தங்கநகைகள் கொள்வனவுசெய்பவர்களுக்கு நகைக் கடைகளில் விசேட சலுகை வழங்கப்பட்டதுடன் நகைக் கொள்வனவில் ஈடுபடுபவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-66,17)

## கணினிமயமாகின்றது சைவபரிபாலனசபை

யாழ்ப்பாணம், மே 2

சைவபரிபாலனசபையின் நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொடர்புகள் என்பன கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன.

சபையுடன் தொடர்பில் இல்லாத ஆயுள் அங்கத்தவர்களை 077 789 5716 எனும் வாட்ஸ்அப் இலக்கத்தினூடாகத் தொடர்பு கொள்ளுமாறு சைவபரிபாலனசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

## செயற்பட்டு மகிழ்வோம்

கிளிநொச்சி, மே 2

பளை இந்திராபுரம் பேர்ள் முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு முன்பள்ளி முன்றலில் நாளை சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வடக்குக் கல்வி வலய ஆரம்ப முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி அலகின் உதவிக் கல்விப் பணிப்பாளர் பொலிஸ். விஜயநாதன் கலந்துகொள்வார். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



தினமும் யாருக்காவது பிரதிபலன் பெறாத ஏதாவது ஒன்றைச் செய்யுங்கள்.

–ஆல்பர்ட் ஸ்வைட்ஸர்–

# இன்னும் நிலைநாட்டப்படாத நீதி


**2006 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி - ஊடக சுதந்திர தினத்துக்கு முந்தைய நாள் கொடூரமான- மிலேச்சத்தன மான தாக்குதல் யாழ்ப்பாணத்தில் உள்ள உதயனின் அலுவலகம் மீது நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம் முற்று முழுதாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தபோது - ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தபோது முகங்களைக் கறுப்புத்துணியால் மறைத்தவாறு மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகள் உதயன் அலுவலகத் துக்குள் புகுந்து சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்தினர். உதயன் பணியாளர்கள் இருவர் கொல்லப்பட்டனர் - சிலர் காயமடைந்தனர். பெறுமதியான சொத்துகள் துப்பாக்கிச் சன்னங்களால் துளைக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன.**

தமிழர் தாயகப் பரப்பைப் போர் சூழ்ந்திருந்தபோது, உண்மைளைத் துணிந்து உரக்கச் சொன்னவன் உதயன். தமிழர் தாயகப் பிரதேசம் எவ்விதமான வெளித்தொடர்பும் இல்லாத காலத்தில், தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை களை, உண்மை நிலைவரத்தை சர்வதேசத்துக்கு வெளிச்சம் போட்டுக்காட்டியதில் உதயனுக்குப் பெரும் பங்குண்டு. அதி காரத்தில் இருந்தவர்களுக்கும், அதிகாரத்துடன் இருந்தவர்களுடன் ஒட்டிக்கொண்டிருந்தவர்களுக்கும், தன் இன மக்கள் சார்ந்த 'உதயனின்'துணிச்சல் மிக்க பணி பெரும் தலையிடியாகமாறியதால், அதிகாரத்தில் இருந்தவர்கள் தம்மோடு ஒட்டிப்பிழைத்தவர்களைக் கொண்டு 'உதயனின்' குரல்வளையை நசுக்கப் போட்ட கொடூரத் திட்டமே இது. ஆனால் இந்தக் கொடூரத் தாக்குதலின் பின்னரும் மறுநாள் 'உதயன்' மக்களுக்காக உதித்தது என்பது வரலாறு.

அன்றைய காலப்பகுதியில் ஊரடங்கு வேளையில், இராணு வத்தின் ஒத்துழைப்புடன் வடக்கில் கொலைவெறியாடித் திரிந்தவர்கள் யார் என்பது பரகசியமானது. பொதுமக்கள் அத்தியாவசிய - அவசர தேவைக்குக்கூட வெளியே நடமாட முடியாதவாறு ஊரடங்கால் அடக்கப்பட்டிருந்த காலத்தில், வெள்ளை வாகனங்களில் தங்களின் கொலைக்களத்தை அரங்கேற்றியவர்களை மக்கள் நன்கறிவார்கள். உதயன் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலும் ஊரடங்குவேளை யில் நடத்தப்பட்டிருந்தது. சந்திக்குச் சந்தி இராணுவத்தின் காவலரண்கள் இருந்தபோது, ரி-26 ரகத் துப்பாக்கியுடன் மோட்டார் சைக்கிளில் வந்து தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றிருந்தனர் அந்தக் கொலையாளிகள். 'உதயன்' மீதான மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டு 19 ஆண்டுகள் கடந்திருந்தாலும் ஆட்சியில் இருந்தவர்கள் குற்றவாளிகளைக் கண்டறிவதில் எந்தவித ஆர்வமும் காட்டவில்லை. மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் நடந்த இந்தச் சம்பவம் தொடர் பான ஆரம்ப விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டு, குழிதோண்டிப் புதைக்கப்பட்ட 'உண்மைகள்' இன்றுவரை வெளிக்கொணரப்படவில்லை.

உதயனின் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டு இன்றுடன் 19 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் அந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்டவர்கள் இன்னமும் தண்டிக்கப் படாது, சமூகத்தில் சுதந்திரமாகவே நடமாடிக்கொண்டி ருக்கின்றனர். அரச ஆதரவுடன் இந்தக் கொடூரத்தை அரங்கேற்றியவர்கள் யார் என்பது சகலருக்கும் தெரிந்தி ருந்தபோதும், குற்றவாளிகள் இன்னமும் பாதுகாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

'உதயன்' 40க்கும் மேற்பட்ட தடவைகள் தாக்கப்பட்டி ருக்கின்றான், பணியாளர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின் றார்கள், பலர் மீது கொலை முயற்சிகள் நடந்திருக்கின்றன, சொத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தச் சம்பவங்களில் இதுவரை எவரும் சந்தேகத்தில்கூடக் கைது செய்யப்படவில்லை. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக அடிப்படை விசாரணைகள்கூட முன்னெடுக்கப்படவில்லை. குற்றவாளிகள்திட்டமிட்டுத்தப்பிக்கவிடப்பட்டிருக்கின்றார் கள். கடந்த காலக் குற்றங்கள் விசாரிக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று கூறும் தற்போதைய அரசாங்கம், கடந்த காலங்களில் ஊடகங்கள், ஊடகவியலா ளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையும், அவற்றின் பின்னால் உள்ளவர்களையும் கண்டறிந்து தண்டிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தெற்கை திருப்திப் படுத்தமுயலாது, வடக்கில் அரசாங்க- இராணுவ ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட ஊடகங்கள் மீதான தாக்குதல்களின் சூத்திரதாரிகளைக் கண்டறிந்து, அவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும். நீதி நிலைநாட்டப்படவேண்டும்.





# ஆடை ஏற்றுமதியில் சீன நிறுவனம் முதலீடு

கொழும்பு, மே 2

**அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அதிரடி வரிவிதிப் பின் காரணமாக இலங்கையின் ஆடைக்கைத் தொழில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் சீனா இலங்கைக்கு கைகொடுக்க முன்வந்துள்ளது.**

இலங்கையின் ஆடை உற்பத்தி களை இறக்குமதிசெய்யும் பிர தான இறக்குமதியாளராக அமெ ரிக்கா விளங்குகிறது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அதிரடி வரி விதிப்பின் காரணமாக இலங்கை யின் ஆடைக்கைத்தொழில் நெருக்கடியை எதிர்கொண்டுள் ளது. இந்தநிலையில் சீனாவின் லியன்பாசீனாநிறுவனம், போல்ஸ் டர் லங்கா ஆடைக்கைத் தொழில் நிறுவனத்துடன் 5.08 மில்லியன் டொலர் முதலீட்டில் ஒப்பந்தமொன்றை செய்துள் ளது. இதற்கான ஒப்பந்தம் முத லீட்டுச் சபை அதிகாரிகளுக்கும், சீன அதிகாரிகளுக்குமிடையே கைச் சாத்தாகியுள்ளது. இந்த நிறுவனம் ஆரம்பிக்கவுள்ள ஆடைத்தொழிற்சாலையில் 679 பேருக்கு வேலைவாய்ப்பு வழங் கப்படவுள்ளது. ஆடை ஏற்றும தியை இலக்காகக்கொண்டே இந்தத் தொழிற்சாலை ஆரம் பிக்கப்பட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டுள்ளது. (எ-6)

# ரணிலின் பிரதான பாதுகாப்பு அதிகாரி இடமாற்றம்

கொழும்பு, மே 2

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான பாதுகாப்பு அதிகாரியை உடன் நடைமுறைக்குவரும் வகை யில் இடமாற்றம் செய்ய பொலிஸ் தலைமையகம் நடவ டிக்கை எடுத்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் பிர தான பாதுகாப்பு அதிகாரியான பிரதான பொலிஸ் பரிசோதகர் அசோக ஆரியவன்ச காங்கே சன்துறை பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள் ளார்.

அசோக ஆரியவன்ச, ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப் புப் பிரிவில் 23 வருடங்கள் பணியாற்றியுள்ளதோடு, அவ ரது பிரத்தியேக பாதுகாப்பு அதிகாரியாகவும் 15 வருடங் கள் பணியாற்றியுள்ளார் என் பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# பகிடிவதை; மாணவன் உயிர்மாய்ப்பு

கொழும்பு, மே 2

பகிடிவதை காரணமாக மன முடைந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உயிர் மாய்த்துக்கொண்டுள்ளார். சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்பப் பொறியி யல் பீடத்தில் இரண்டாம் ஆண்டு படிக்கும் 23 வயது டைய சரித் தில்ஷான் என்ற மாணவனே இவ்வாறு உயி ரிழந்துள்ளார்.

பல்கலைக்கழக புத்தாண் டுக்கொண்டாட்டத்தின்போது அவருக்கு ஏற்பட்ட தாங்க முடியாத அவமானமே அவ ரது உயிர்மாய்ப்புக்கு வழிவ குத்ததாக அவரது உறவினர் கள் மற்றும் நண்பர்கள் குற் றஞ்சாட்டியுள்ளனர். (ச-இ)

# கைது

கொழும்பு, மே 2

உள்ளூராட்சி அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் சப்ரகமுவ மாகாணத் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 2016ஆம் ஆண்டு 77 வேலைத்திட்டங்களுக்கு அளவுக்கதி மான கொடுப்பனவுச் சிட்டைகளை வழங் கிய குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-41-6)

# 478 மில்லியன் செலவில் பரீட்சைத் திணைக்களம்!

கொழும்பு, மே 2

478 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட ஆறு மாடிகளைக்கொண்ட புதிய பரீட்சைத்திணைக்களக் கட்டடம் கடந்த புதன்கிழமை பிரதமர் ஹரிணி அமர சூரியவால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கட்டடத்தில் தடைதாண்டல் பரீட்சை போன்ற பிற பரீட்சைகளை நடத்துவதற்கும் விசேட தேவையுடையோர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 175 ஆசனங்களைக்கொண்ட அரங்கு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (ச-41-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 வருடங்கள் கடந்தும் கிட்டாத நீதி

■ தம்பி


இலங்கையில் சுதந்திரம் பேசும் அனைவரது குரல்களும் நெரிக்கப்பட்டே வந்திருக்கின்றன. கருத்துச் சொல்லிகளாகவும், கருத்து சிருஷ்டிப்பவையாகவும் இருக்கும் ஊடகங்கள் மிக மோசமான வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதும் தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டதாக இருக்கின்றது. அதிகாரத்துக்கு எப்போதெல்லாம் இந்த ஊடகங்கள் வலி தருகின்றனவோ அப்போதெல்லாம் அது தனது காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டத் தவறுவதில்லை. அலுவலகங்களுக்குள் பகலிலும், இரவிலும் கண்மூடிய துணிச்சலுடன் இறங்கிச் சுட்டுத் தள்ளித் தனது வெறியைத் தீர்த்துக்கொள்கிறது. தமிழர்களின் உரிமைசார்ந்த விடயங்களை மூன்று தசாப்தங்களாகத் தமிழ்ப்பரப்பில் இருந்து பேசிவரும் உதயன் பத்திரிகை இதே அதிகாரத்தின் சவால்களை எதிர்கொண்டு வருவதைத் தமிழ் மக்கள் உணர்ந்தபடியே வாசிக்கின்றனர். ஒவ்வொரு முறையும் நிகழ்த்தப்படும் உதயன் மீதான கொடூரத் தாக்குதல்கள் தமிழ் மனங்களையும் அச்சுறுத்துவதாக அமைந்து வந்திருக்கின்றன. இவ்வாறு கொடூரமானதொரு நினைவை உதயனுக்கும் தமிழர்களுக்கும் தந்து இன்றோடு 19 வருடங்கள் கடக்கின்றன.

ஊடக சுதந்திரம் வேண்டிய கனதியான நாளொன்றில் அந்தப் படுகொலை நடந்தது. அந்தக் காலத்தில் தமிழர் பரப்பெங்கும் விரிந்திருந்த இனந்தெரியாத படுகொலைகள் 'உதயன்' மீதும் காட்டுத்தனத்தைக் காட்டியது.

இரவுவேலையின் தொடக்கத்திற்கு ஊடகப் பணியாளர்கள் தயாராகிக்கொண்டிருக்கையில் சுவரேறிப்பாய்ந்தது குரூரம். கண்ணில் கண்டவைகளை எல்லாம் சுட்டுத்தள்ளின அவர்களிடமிருந்த துப்பாக்கிகள். அங்கு பணியாற்றிய இருவரைப் பலியெடுத்ததுடன் தமது வெறியைத் தீர்த்துக்கொண்டனர் துப்பாக்கிதாரிகள் . இன்றுடன் 19 வருடங்களைக் கடந்துவிட்டது அந்தப் படுகொலை நாள். ஆனால் அவர்கள் நினைத்தது போல் அந்த ஊடகத்தின் பணியை தடுத்துநிறுத்தமுடியாமல் போனது. மரணம் சூழ்ந்துகொண்டிருக்கையில்கூட தனது பணியை உதயன் ஆற்றியது. அச்சுறுத்தல்களோடு பயணித்துத் தன்னை நோக்கி நீளும் தடைகளை உறுதியோடு எதிர்கொள்வதால்தான் காலப்பெருவெளியில் கரைந்துபோகாமல் இன்றும் நின்றுநிலைக்கிறது உதயன்.

இந்தப் படுகொலையின் பின்னரும் வழமையான வழக்குகள், மற்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இலங்கையின் எழுதப்படாத விதியாக இருக்கும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாத, தண்டிக்கப்படாத நிலைமைகள் இன்னும் இந்தப் படுகொலைகளிலும் தொடர்கின்றன. குற்றவாளிகள் தொடர்ந்தும் உருவாகியபடியே தம் தாக்குதல்களைத் தொடர்ந்த வண்ணமிருக்கின்றனர். உளவியல் ரீதியான, பௌதிக ரீதியான தாக்குதல்களுக்கு அவர்கள் பயிற்றப்பட்டு களமிறக்கப்பட்டிருக்கின்றனர். இந்த வன்முறை கொடூரமானதாக இப்போதும் மாறிவருகின்றது.


19 வருடங்களை அந்தப் படுகொலை கடந்த பின்னரும் நினைவுகளை மறக்காமல் பகிர்ந்துகொள்கின்றனர். அந்தத் துயரச் சம்பவத்தை நேரில் பார்த்த உதயனின் ஊழியர்கள். "ஏழு மணிக்கு வேலையைத் தொடங்கினன். தொடங்கிக் கொஞ்சத்தால் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அந்த நேரத்தில அது வழமைதானே. யாரையோ சுடுறாங்கள் எண்டுட்டு பேசாம இருந்திட்டம். கொஞ்சத்தால எங்கட செக்கியூரிட்டிப் பொயின்டிலதான் அது நடந்திருக்கு எண்டது தெரியவந்தது. உடன கனக்க வெடிச்சத்தம் கேட்கத் தொடங்கிற்று. மேல வாறாங்கள் எண்டத உணர்ந்து கொண்டதும் ஓடி ஒளிச்சிட்டம். பிறகு மேலவந்து தேடித்தேடிச் சுட்டாங்கள். கீழ இறங்கிப் போயிற்று திரும்பவும் வந்து கொம்பியூட்டர்களுக்கு சுட்டாங்கள்"."எல்லாம் முடிய கீழபோய் பாத்தால் 2பேர் செத்துக்கிடக்கினம். 2பேர் காயப்பட்டுக் கிடக்கினம். பிறகு என்ன செய்தம் என்டே தெரியேல்ல. ஆனால் அடுத்த நாள் பேப்பர் வந்தது. இரவிரவா வேலை செய்தம். எதைத் தொடவும் பயமா இருந்தது". "நாங்க அந்த நேரத்தில செத்தம் எண்டுதான் நினைச்சம். கிட்டத்தட்ட 15நிமிசம் வரும். பயத்தில செத்துப்போன நேரமா அது இருந்தது" என்கிறார்கள் இன்றும் எஞ்சியிருக்கும் ஊழியர்கள்.




முதல் இலக்கான சுரேஷ்



கட்டளையை மீறிய ரஞ்சித்துக்கும் சூடு





### 2006.05.02 மரணத்தை கையில் வைத்தபடி அச்சேறிய செய்தி

சுவர் ஏறிக்குதித்து வந்தவர்களில் நால்வர் முதலில் அலுவலகப்பாதுகாப்பு ஊழியர் இருக்கும் இடத்திற்குச் சென்று துப்பாக்கிமுனையில் அவரைக்கீழே படுக்கவைத்தனர். நிமிர்ந்தால் சுடுவோம் என்று மிரட்டிவிட்டு அவர் அருகில் ஓர் ஆயுததாரி நின்றுகொண்டான். ஏனையவர்களில் இருவர் அலுவலகத்தின் முன்புறமிருந்த சந்தைப்படுத்தல் முகாமையாளரின் அலுவலகம் நோக்கிச் சென்றனர். எந்தக் கேட்டுக் கேள்வியும் இன்றி அவர் மீது சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் அவர் இருந்த இடத்திலே மடிந்து வீழ்ந்தார். பின்னர் அங்கிருந்து திரும்பிய அவர்கள் பாதுகாப்பு அலுவலரின் அருகோடு இருந்த விநியோகப்பகுதிக்குள் நுழைந்தனர். அங்கு பணிபுரிந்துகொண்டிருந்த அனைவரையும் முதலில் கீழே இருக்குமாறு கூறி தாறுமாறாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். பின்னர் அனைவரையும் கீழே படுக்குமாறு கூறினர். எவரும் நிமிர்ந்து பார்க்கக்கூடாது என்று கூறிவிட்டு மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதில் பாதுகாப்பு ஊழியருக்கு அருகே நிலத்தில் வீழ்ந்து படுத்திருந்த விநியோகப்பகுதி ஊழியரான உதயகுமார் காயமடைந்தார். காயப்பட்டதும் அவர் "ஐயோ" என எழுப்பிய குரலைக்கேட்டு துள்ளி நிமிர்ந்து பார்த்த ரஞ்சித்தை நோக்கி ஆயுததாரி துப்பாக்கியால் சுட்டான் பாதகன். காயமடைந்து கீழே வீழ்ந்த அவரின் முதுகில் காலை வைத்து மீண்டும்அவர்மீதுசரமாரியாகதுப்பாக்கிப்பிரயோகம் செய்தான். அதனால் அவரும் அந்த இடத்திலேயே மடிந்தார். விநியோகப் பிரிவில் இருந்த உதவி விநியோக அலுவலரின் தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டி "எங்கேயடா கெட் ஓபிஸ் காட்டு" எனக்கேட்டுள்ளனர். பின்னர் துப்பாக்கிமுனையில் அவரை இழுத்துச் சென்று ஆசிரியர் பீடத்தைக் காட்டுமாறும் மிரட்டியதுடன் குறித்த செய்தி ஆசிரியரின் பெயரைக் கூறி "அவன் எங்கே?" என்று கேட்டனர். பாதுகாப்பு ஊழியரின் பகுதியில் இருந்து உள்ளே ஆசிரியர் பீடத்துக்குச் செல்லும் வரையும் கண்ணில் கண்ட இடத்தில் எல்லாம் சகட்டு மேனிக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

துப்பாக்கிச்சூட்டுச்சத்தம் கேட்டதையடுத்து சுதாகரித்துக்கொண்ட ஆசிரியர்பீட ஊழியர்கள் மறைவிடம் ஒன்றில் பதுங்கிக்கொண்டனர் என்பதால் அதிர்ஸ்டவசமாக உயிர்தப்பிக்கொண்டனர். சகட்டுமேனிக்கு ஆசிரியர்பீடத்துக்குள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட ஆயுததாரிகள் மூவரும் பின்னர் விநியோக அதிகாரியையும் இழுத்துக் கொண்டு படிகளில் இறங்கத்திரும்பினர். எனினும் திடீரென விழிப்பு வந்தவர்களாக அவர்களில் ஒருவன் ஓடிச்சென்று கணினி அறைக்குள் புகுந்து கண்ணாபின்னா என்று சுட்டுத்தள்ளினான். இதில் அங்கிருந்த கணினிகள் அனைத்தும் சிக்கிச் சிதறிச் சின்னாபின்னமாகின பத்திரிகையைப் பிரசுரிப்பதற்கு முடியாத அளவிற்கு அனைத்துக் கணினிகளும் சல்லடைகளாகத் துளைக்கப்பட்டன. அதன் பின்னர் அங்கிருந்து வெளியேறிய ஆயுததாரிகள், சென்ற இடங்களில் எல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். மீண்டும் பாதுகாப்பு ஊழியரின் பகுதிக்குச் சென்ற ஒருவர், பத்திரிகைகளின் அச்சகப்பகுதிக்குச் சென்று தாக்கவேண்டும் என்று அரைகுறைச் சிங்களத்தில் தெரிவித்துள்ளார். எனினும் மற்றையவர் அதனை மறுத்து "நேரமாகிவிட்டதால் உடனடியாக நாங்கள் செல்லவேண்டும்" என்று சிங்களத்தில் பதிலளித்துள்ளார்.

துப்பாக்கிமுனையில் தம்முடன் இழுத்துச் சென்ற விநியோக உதவி அதிகாரியைக் கீழே படுக்குமாறு கூறிவிட்டு சடுதியாக வீதிக்குச் சென்று மோட்டார் சைக்கிள்களில் ஏறித் தப்பிச்சென்றுவிட்டனர் கொலையாளிகள். இன்னும் அவர்கள் யார் என்று தெரியாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் அரச பொலிஸார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகளைச் சுமந்து வலிமையோடு…



உதயன்

சர்வதேச ஊடக சுதந்திரதினத்திற்கு முதல்நாள்

உதயன் அலுவலகத்திற்குள் புகுந்து

ஆயுததாரிகள் நேற்று வெறியாட்டம்

முகாமையாளர் உட்பட இருவர் பலி!

இருவர் காயம்; உடமைகள் சேதம்!!





## மன்னாரில் மே தினக் கொண்டாட்டம்



மன்னார், மே 2

மன்னார் கத்தோலிக்க மக்கள், தொழிலாளர் தினத்தன்றே புனித சூசையப்பரின் தினத்தை மத வழிபாடுகளுடனும் விளையாட்டுப் போட்டிகளுடனும் நேற்று வியாழக்கிழமை மிக விமர்சையாகக் கொண்டாடினர்.

இதன்போது கடற்கரைகளை அண்டி வாழ்கின்ற கிராம மக்கள், காலையில் திருப்பலிகளில் கலந்துகொண்டபின் புனித சூசையப்பர் திருச்சுரூபத்தை படகில் ஏற்றி கடலில் வலம் வந்து கடலை ஆசீர்வதிக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மே தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தின் பல இடங்களில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. (ச-25, 60)



மே முதலாம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவுநாள் வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி பகிர்ந்து அளிக்கப்பட்டது. (ச-113)

## கதிர்காமக்கந்தன் ஆலயத்துக்கு
# பாதயாத்திரை ஆரம்பம்

வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக்கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழாவை முன்னிட்டு, நீண்டதூரப் பாதயாத்திரையாகக் கருதப்படும் கதிர்காமக்கந்தன் ஆலயத்துக்கான பாதயாத்திரை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலயக் கருவறையில் பூசை வழிபாட்டுக்காக வைக்கப்பட்ட பாதயாத்திரைக்கான முருகப்பெருமானின் பிரதான வேல் கப்புறாளையால் குறித்த பாதயாத்திரைக்குத் தலைமை தாங்கிச்செல்லும் ஜெயா வேல்சாமியின் கையில் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பஜனை பாடியவாறு சந்நிதியான் ஆலய வீதியை அடியவர்கள் வலம் வந்தனர். தொடர்ந்து அங்கிருந்து பாதயாத்திரை ஆரம்பமானது.

சந்நிதியான் ஆச்சிரமத்தை அடைந்த பாதயாத்திரைக் குழுவினர் அங்கு இடம்பெற்ற சிறப்புப் பஜனை வழிபாடுகள் மற்றும் காலை வேளை ஆகார உபசாரங்களில் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளின் ஆசிர்வாதத்தைப் பெற்று பயணத்தைத் தொடர்ந்தனர்.

இந்தப் பாதயாத்திரை கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஊடாக உகந்தைமலை முருகன் ஆலயத்தை அடைந்து காட்டுப்பாதை ஊடாக ஜீன் மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமை கதிர்காமக்கந்தன் ஆலயத்தைச் சென்றடையுமெனத் தெரிவிக்கப்பட்டது. பாதயாத்திரைக் குழுவினர் செல்லும் இடங்கள் தோறும் ஆலயங்கள் பலவற்றையும் தரிசிக்கவுள்ளனர்.

அடியவர்கள், நேற்று நீர்வேலி தரவைப் பிள்ளையார் ஆலயத்திலும், இன்னும் சிலர் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திலும், வேறுசிலர் இலந்தைத்திடல் காளிகோவிலிலும் தங்கியிருந்தனர். (ச-25,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மரண அறிவித்தல்

பிறப்பு

10 • 05 • 1941

இறப்பு

30 • 04 • 2025



## சிவத்திரு.சிவகுரு கதிரவேலுகுருக்கள்

**( ஓய்வு பெற்ற அதிபர் பதுளை டிக்வெல தமிழ் வித்தியாலயம்,ஓய்வு பெற்ற ஆசிரியர்- யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்/ , யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)**

யாழ்ப்பாணம் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவத்திரு. சிவகுரு கதிரவேலு குருக்கள் நேற்றுமுன்தினம் (30.04.2025) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சிவகுரு - திலகம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும், பத்மாதேவி கதிரவேலு (முன்னாள் உப அதிபர், யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை) அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான சிவதிரு.இராமு நவரத்தினக் குருக்கள் - சரஸ்வதி அம்மா தம்பதியரின் ஆசை மருமகனும்,பத்மசொரூபன் (லண்டன்), பத்மதாஸ் (கனடா), பத்மஶ்ரீ (யா/ வயாவிளான் மத்திய கல்லூரி) - ஆசிரியர்), காலஞ்சென்ற பத்மசீலன், பத்மகமலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு தந்தையும், ராஜ்குமாரி (லண்டன்), அமலா (கனடா), ஜெயசோதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி சின்னத்துரை, புவனேஸ்வரி தம்பித்துரை, கேதாரேஸ்வரி சின்னத்துரை, பூமணி முத்துக்குமாரசாமி, தங்கேஸ்வரி பேரின்பநாதன் ஆகியோரின் சகோதரரும், சரோஜினிதேவி பாலசுப்பிரமணியம் (அவுஸ்திரேலியா), சிவத்திரு பிரபுதேவக்குருக்கள், காலஞ்சென்ற கமலாதேவி, மற்றும் சந்திராதேவி, வதனதீசன் (கொழும்பு), இந்திராதேவி ஆனந்குமாரன் (ஹொலண்ட்), இராமதேவன் (கனடா), அல்லமதேவன் (அவுஸ்திரேலியா), வசவதேவன் (கனடா), மகாதேவன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், ரிஷிகேஷ், கேசவி, கிஷோன், தேனகா, மகிழன்,அனன்யா ஆகியோரின் ஆசைப்பேரனும், குலசிங்கம் யோகேஸ்வரி, கணேசபிள்ளை - தவமணி, குமாரசாமி - பூமாதேவி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் சிவைக்கியக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை (04.05.2025) முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று வேம்பன் இந்துமயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**

| | |
|---|---|
| க.பத்மாதேவி | 077 672 8423 (இலங்கை) |
| க.பத்மஶ்ரீ | 077 612 0619 ( இலங்கை) |
| க.பத்மசொருபன் | 044 790 375 4949 (லண்டன்) |
| க.பத்மதாஸ் | 001 (647) 836 8120 ( கனடா) |
| க.பத்மகமலன் | 044 740 489 5198 ( லண்டன்) |

(Cs/58140) K-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 07 - 1967

மறைவு 01 - 05 - 2025



**அமரர் தவயோகரானி முருகதாஸ்**

யாழ்ப்பாணம் அரசடி வீதியை பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தவயோகராணி முருகதாஸ் அவர்கள் நேற்று (01.05.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் புங்குடுதீவு 6ம் வட்டாரத்தை சேர்ந்த காலம் சென்றவர்களான சோமசுந்தரம் - தங்கம்மா தம்பதியின் அன்பு மகளும் காலம் சென்றவர்களான நாகேந்திரம் - பரிபூரணம் தம்பதியின் அன்பு மருமகளும், நாகேந்திரம் முருகதாஸ் (வேலணை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், கஜார்த்தனி (இலங்கை திறந்த பல்கலை கழக மாணவி), நிந்துஜன் (யாழ் இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவராஜா, நாகராணி, சோதிபாலன் (கனடா), சுந்தரலிங்கம், சோதிராணி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலம் சென்ற விஜயலட்சுமி, அன்னலட்சுமி, சிவகலை மற்றும் கோமதி, ஜெயானந்தன், சியாமளா, ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (02.05.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம் பெற்று தகனகிரியைகளுக்காக பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

செபத்தியார் வீதி ஓட்டுமடம்
யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்.
T.P. 0776848346
0774955590

(CS 3075) D.

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 05 . 1944

மறைவு 30 . 04 . 2025



**கனகேஸ்வரி இராசலிங்கம்**

சங்கரத்தை வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகேஸ்வரி இராசலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (30.04.2025) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு - முத்தம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், இராசலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வீரவாகு, வேதமணி ஆகியோரின் அன்பு சகோதரியும், சதீஷ்குமார், றமேஸ், குமரேஷ் ஆகியோரின் அன்புத் தாயரும், நந்தினி,அஜந்தா, ஜனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஷிவேன், ஹீரன், ஆதிரன் ஆகியோரின் பாசத்திற்குரிய பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 191 8214, 076 925 1973

டாக்டர் செல்லத்துரை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(CR/44895) J-1



**வவுனியா**

# வர்த்தக நிலையமொன்றில் பழுதடைந்த முட்டைகள் மீட்பு

வவுனியா, மே 2

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் பழுதடைந்த முட்டைகளை விற்பனைசெய்த வர்த்தக நிலையமொன்றுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள முட்டை விற்பனை நிலையத்தில் பழுதடைந்த முட்டை விற்பனை செய் யப்படுதாகக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய நேற்றுமுன்தினம் புதன்கிழமை சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர்ச் சோதனை நடவடிக்கைகயை மேற்கொண்டனர்.

இதன்போதுபொதுச் சகாதாரப் பரிசோதகர்களால் பாவனைக்குதவாத ஆயிரத்துக்கும் மேற்பட்ட முட்டைகள் மீட்கப்பட்டன.

அதனையடுத்து குறித்த வர்த்தக நிலையத்துக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ச-18,110)

**விற்பனைக்கு**

அத்திவாரத்தால் வெட்டப்பட்ட மண் விற்பனைக்கு.
காணி நிரவுதல், அத்திவார நிரவுதலுக்கு உகந்தது.

077 635 9488

# 8ம் ஆண்டு நினைவுகளுடன்

அன்னை மடியில் 03 . 06 . 1976

ஆண்டவன் மடியில் 02 . 05 . 2017



**அமரர் திருமதி றொறின்மேரி அருள்வதனன்**

ஈர் நான்கு ஆண்டுகள் கடந்ததுவோ ! ஈன்றவள் எம்மை விட்டு சென்றாரா !
ஈசனின் பாதம் அடைந்தாரா ! இன்றைவரை அன்புக்காய் ஏங்குகிறோம்
மூன்று புதல்வராய் நாம் இங்கே முழுமையான பாசப் பிணைப்புடனே !
அன்புடன் எம்மை வளர்த்தவளை அகிலம் உள்ளவரை மறப்போமா !

பிரிவால் துயருறும்
கணவர்: அ.அருள்வதனன்
பிள்ளைகள்: அ.சபிஷன், அ.றிஷானாத், அ.நிபோஷன்
077 645 0304

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(CS/58132) J-1

# மரண அறிவித்தல்

மலர்வு 08 . 04 . 1936

உதிர்வு 30 . 04 . 2025



**திருமதி செல்லம்மா பாலசிங்கம் (குஞ்சு)**

மூளாயை பிறப்பிடமாகவும் தற்சமயம் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்லம்மா பாலசிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (30.04.2025) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராஜா - செல்லம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும், பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்துக்குமாரு, நாகமுத்து தமபதியினரின் அன்பு மருமகளும், இடபரூபன், வகுலமாலா, காலஞ்சென்ற சித்ரூபன், சற்சொரூபன் (சச்சா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவசக்தி, காலஞ்சென்ற ஜோதிவேல், கோமதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நவீன், பிரணவி, சரணவி, அபிஷரன், அபிவர்ஷன், ஆருத்ரா, காருண்யன், நந்திகா, தட்சயன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும், காலஞ்சென்றவர்ளான மகேஸ்வரி, செல்லப்பா, பரமேஸ்வரி, துரைசிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தங்கையும் காலஞ்சென்றவர்களான பூலோகம், அம்பலவானர், மகேஸ்வரி, மனோன்மணி, புனிதவதியார் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் முற்பகல் 8.30 மணியில் இருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 12.30 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இடபரூபன் (மகன்) - 077 766 7854
சச்சா (மகன்) - +15 148 874 561
சிவசக்தி (மருமகள்) - 077 311 4409

(CS/30094) J-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டங்கள் நடைமுறைப்படுத்தலில் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லை

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 2**

**இந்த ஆண்டுக்கான திட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் எதிர்பாக்கப்பட்ட அளவில் முன்னேற்றம் இல்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மீளாய்வுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றபோதே ஆளுநர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒதுக்கப்பட்ட நிதியை ஒதுக்கிய திட்டங்களுக்கு உரிய காலப்பகுதியில் செலவுசெய்துமுடிக்கவேண்டியது அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களின் பொறுப்பு. திட்டங்களை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தி முடிக்காது சாக்குப் போக்குகளைக் கூறக்கூடாது. எமது மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகச் செலவுசெய்வதுடன் அடுத்த ஆண்டு அதிகளவு நிதியைக் கோர வேண்டும். அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களின் தலைமைத்துவத்தில்தான் இந்தத் திட்டங்களின் நடைமுறையாக்கத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது. தவறிழைக்கும் ஒப்பந்தக்காரர்களை கறுப்புப் பட்டியலில் உள்வாங்கவேண்டும் என்பதைப் பல தடவைகள் கூறியுள்ளேன். அதை நடைமுறைப்படுத்தவேண்டியது பிரதிப்பிரதமசெயலாளர்பொறியியல் சேவைகளின் பொறுப்பு-என்றார்.

திட்டங்களின்பௌதீகமுன்னேற்றம் தொடர்பில் வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) எம்.கிருபாசுதன் ஒவ்வொரு அமைச்சுகள், திணைக்களங்கள் ரீதியாகத் தெளிவுபடுத்தினார்.

2025 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாணசபையின் நிதிக்கூற்று அறிக்கைப் புத்தகம் இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநரிடம் வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளரால் (நிதி) ஒப்படைக்கப்பட்டது. (எ-66,60)



கிறிசலிஸ் அரச சார்பற்ற நிறுவனம், மருதங்கேணியில் இயங்கிவரும் பாதுகாப்பு இல்லத்துக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியானஉலர்உணவுப்பொருள்களைக் கட்டம் கட்டமாக வழங்குவதற்கு முன்வந்துள்ளது. இதற்கமைய, முதலாம் கட்ட உலர் உணவுப்பொருள்கள் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் ம.பிரபாகரனால் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபனிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன. (ச-25-66)

# இந்தியா காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் மன்னார் விஜயம்

மன்னார், மே 2

இந்தியாவின் தமிழ்நாடு திருவள்ளூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான காசிநாத் செந்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளாரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். நிகழ்வில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தின் பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன. (ச-41-56)



# காலாவதிப் பொருள்கள் ரூ. 40,000 தண்டம் !

யாழ்ப்பாணம் ,மே 2

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வண்டு மொய்த்த பொருள்கள் மற்றும் திகதி காலாவதியான பொருள்கள் என்பவற்றை விற்பனைக்கு வைத்திருந்த பல்பொருள் அங்காடி ஒன்றுக்கு யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றம் 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கந்தையா ஜெகானந்தன் தலைமையிலான குழுவினரால் அண்மையில்உணவுகையாளும்நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே குறித்த பல்பொருள் அங்காடி சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டமை கண்டறியப்பட்டது.

அதற்கமைய குறித்த அங்காடிக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்டவழக்குகடந்தசெவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மேலதிக நீதிவான் எஸ். லெனின்குமார், பல்பொருள் அங்காடி உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் வழங்கினார். (ச-22,26)

# டெங்கு, சிக்கன்குனியா விழிப்புணர்வு அவசியம்

யாழ்ப்பாணம், மே 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவிவரும் சிக்கன்குனியா மற்றும் டெங்குத் தாக்கம் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் என யாழ். போதனா மருத்துவமனைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சிவநாதன் யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையுடன் ஒப்பிடுகின்ற பொழுது சிக்கன்குனியாத் தாக்கம் வடக்கில் குறைந்தளவில் இருந்தாலும் பொதுமக்கள் இது குறித்து அவதானமாக இருக்கவேண்டும்.

டெங்குக் காவியாகச் செயற்படுகின்ற நுளம்பினம் மூலமே சிக்கன்குனியா பரவுகின்றது.

எனவே பொதுமக்கள் தங்களுடைய வீட்டுவளாகத்தை சுத்தமாக வைத்திருப்பதனூடாக பாதக நிலைகளைத் தவிர்க்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய அமரர் தமிழினி சதீஸ் ஞாபகார்த்தமாக சாவகச்சேரிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்க ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. (ச-25, 9)

# அளம்பில் இளந்தென்றல் வெற்றிக்கிண்ணம் சுவீகரிப்பு

முல்லைத்தீவு, மே 2

முல்லைத்தீவு - சிலாவத்தை தெற்கு, தியோகுநகர் அலைகள் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட அணிக்கு ஆறு பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிலையில் கரிப்பட்டமுறிப்பு உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி, அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியினர் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரிப்பட்டமுறிப்பு உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினர் எட்டுப் பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றனர். அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அளம்பில் இளந்தென்றல் அணியினர் 7.1பந்துப்பரிமாற்றங்களில் 3இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டி கிண்ணத்தைத் தமதாக்கிக்கொண்டனர். (ச-83)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை ஒடுக்க புதிய சட்டங்கள் உருவாகும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, மே 2**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச்செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். ஆயினும் பயங்கரவாத அல்லது தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் தனிநபர்களை, குழுக்களைக் கையாள்வதற்கு புதிய சட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தை நிவர்த்திசெய்ய அரசாங்கம் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துமா? என்று ஆங்கில ஊடகமொன்று கேட்டபோது, பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டம் தற்போது பயன்பாட்டில் இருந்தாலும் அதைத் தக்க வைத்துக்கொள்வதில் அரசாங்கத்துக்குளந்த ஆர்வமும் இல்லை. நீதி அமைச்சர் ஹர்ஷனநாணயக்கார தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதற்கான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார். ஆயினும் நாட்டைச் சீர்குலைக்கக்கூடிய இன அல்லது மத வெறுப்பைத் தூண்டும்எந்தவொருமுயற்சியையும்நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம். பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தை நிவர்த்தி செய்ய தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால், புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவோம் - என்றார். (எ-6)

## சட்டவிரோத மாட்டிறைச்சியுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சி, மே 2

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக விற்பனை நிலையமொன்றில் 50 கிலோவுக்கும் அதிகமான மாட்டு இறைச்சியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுகாதாரப் பரிசோதகரின் சிபாரிசு மற்றும் கால்நடை மருத்துவரின் பரிந்துரையில் விற்பனைக்கு தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை மீட்கப்பட்டன. (ச-27)

## பஸ் கட்டணம் மாற்றமில்லை!



கொழும்பு, மே 2

டீசல் விலை 12 ரூபாவால் குறைக்கப்பட்டிருந்தாலும், பேருந்துக் கட்டணத்தில் எந்தவொரு திருத்தமும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை மட்டும் பேருந்துக் கட்டணங்களைப் பாதிக்கும் ஒரே காரணியல்ல. ஏனைய அனைத்துச் செலவுகளும் அதிகரித்துள்ளன. பேருந்துக் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளவேண்டுமெனில், டீசல் விலையை 25 ரூபா முதல் 30 ரூபா வரையில் குறைக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## முச்சக்கரவண்டிக் கட்டணங்கள் குறையாது!

கொழும்பு, மே 2

முச்சக்கரவண்டிக் கட்டணங்களைக் குறைக்கமுடியாதுஎன அகில இலங்கை முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அது தொடர்பான முடிவை மேற்கு மாகாண தேசிய போக்குவரத்து ஆணையகம் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணையகம் ஆகியவையே எடுக்கவேண்டும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

மேற்கு மாகாண தேசிய போக்குவரத்து ஆணையகம் அண்மையில் மேற்கு மாகாணத்தில் முச்சக்கரவண்டிப் போக்குவரத்துக் கட்டணங்களை ஒழுங்குபடுத்த முடிவுசெய்துள்ளது. அவர்கள் முச்சக்கரவண்டிப் போக்குவரத்துக்கான புதிய நிலையான கட்டணங்களை நிர்ணயித்தனர். ஆயினும் அது ஒருபோதும் செயற்படுத்தப்படவில்லை. எனவே, முச்சக்கரவண்டியின் போக்குவரத்துக் கட்டணங்களைக் குறைக்க நாங்கள் எந்த முடிவையும் எடுக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


நினைவழியா 19 ஆம் ஆண்டில்...


ஆர்.ரஞ்சித்குமார்


ப.சகாயதாஸ்

உதயனுக்காக உயிர்க்கொடை தந்தோரை நினைவிற் கொள்வோம்

உதயன் குழுமத் தலைவரும் பணியாளர்களும்





திசைகாட்டி அரசாங்கம் சொல்லுற ஒண்டையும் செய்யேலை எண்டதுதான் இப்ப சனத்தின்ர புலம்பல். நீர்மேல் எழுத்துப்போல குடுக்கிற வாக்குறுதியள் ஒவ்வொண்டையும் அந்தந்த இடத்திலயே மறந்துபோடுகினம். அதால வாக்குறுதியள் எல்லாம் வெறும் வாக்குறுதியா அப்பிடியே அந்தரத்தில தொங்க அரசாங்கம் அதொண்டும் தெரியாதமாதிரி நடிக்குது.

ஜனாதிபதித் தேர்தல் மூட்டத்தில, அநுரகுமார யாழ்ப்பாணத்துக்கும் வந்தவர். அப்ப அவருக்கும் சஜித்துக்கும்தான் கடும்போட்டி. தெற்குப் பக்கம் அநுரவுக்கு ஆதரவா அலையடிச்சாலும், தமிழாக்கள் சஜித் பக்கமும், பொதுவேட்பாளர் பக்கமும்தான் கூட நிண்டவை. எண்டாலும் அவரின்ர யாழ்ப்பாணப் பிரசாரக் கூட்டத்தில ஓரளவுக்கு நல்லசனம்தான். யாழ்ப்பாணத்தில கூட்டம் நடந்த அண்டைக்கிரவு உதயனுக்கும் அநுர விசிற் பண்ணினவர். அங்கவைச்சு "எதுக்கு ஜே.வி.பி. சுனாமிக் கட்டமைப்பை எதிர்த்தது? ஏன் வடக்குக் கிழக்கை பிரிச்சது?" எண்டெல்லாம் கேள்வியளால அநுரவைப் பிரிச்சு மேய, அவரோட கூட வந்த இப்பத்தை கடற்றொழில் அமைச்சருக்கு முகமெல்லாம் கறுத்துப் போட்டுது.ஒருமாதிரி இந்தக் கேள்வியளுக்கு 'நான் அவனில்லை' எண்ட கணக்கில சாமாளிப்புக்கேசன் பதில்களைத்தான் அநுரவால சொல்ல முடிஞ்சது.

அவரின்ர பேட்டி முடிய, இதுவரைக்கும் உதயனெண்ட ஊடகத்துக்கு என்னென்ன பாதிப்பு வந்தது? ஏன் குற்றவாளியள் பிடிபடேலை? எண்டு கடும் அக்கறையா அநுர கேட்டார். அதுபற்றின ஒரு பைல் அந்தநேரம் அவரிட்ட குடுபட்டது. அதில உதயனுக்கு எப்ப சுட்டவை, எப்ப எரிச்சவை, எப்ப கடத்தினவை எண்ட எல்லா விபரமும் இருக்கு. அதில ஒண்டுக்குக்கூட நடவடிக்கை எடுபடேல எண்டு சொல்ல, "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்தப் பிரச்சினையளையும் விசாரிப்பம். இவ்வளவு நடந்திருக்கு. ஒருத்தரைக்கூட அரெஸ்ட் பண்ணேலை எண்டால் அது அக்கிரமம். கட்டாயம் நாங்கள் உதயனுக்கு நடந்த பாதிப்புப் பற்றி முக்கியத்துவம் குடுப்பம்" எண்டு சொல்லி அந்தப் பைலை அநுர வாங்கிக்கொண்டு போனவர்தான். பிறகு அதைப்பற்றி மூச்சுக்கூட விடேலை. சிலவேளை அந்தப் பைலையும் துலைச்சுப்போட்டாரோ தெரியேலை. இப்பிடி ஒரு ஊடகத்துக்கு நடந்த அநியாயத்தைக்கூட தட்டிக்கேக்க முடியாதவை சனத்துக்கு நடக்கிற அக்கிரமங்களைத் தட்டிக் கேப்பினம் எண்டு நம்பிறதைவிட கேனைத்தனம் வேறயொண்டுமில்லை கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## உடனடி வேலை வாய்ப்பு

**சமையலாளர்**

எமது சங்கத்தின் பராமரிப்பில் இயங்கும் சிறுவர் இல்லத்திற்கு சமையலாளர் பணிக்காகத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் / அனுகூலங்கள்**

- வயதெல்லை 25 -60
- உணவு. தங்குமிடமும் வழங்கப்படும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
- வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும்.
- கிராமசேவகர் நற்சான்றிதழ் அவசியம்
- முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**தகுதியானவர்கள் அலுவலகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் சுய விபரக்கோவையினை 14.05.2025 இற்கு முன்பதாக தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.**

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி. திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021 222 6525, 076 300 4877

த.தவரூபன்
செயலாளர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது சங்கத்தில்
கிளை மேற்பார்வையாளராகக்
கடமையாற்றி வரும்
**திரு கந்தசாமி மலர்வண்ணன்**
அவர்களின் புதல்வன்
**மலர்வண்ணன் அகரன்**

2024 க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் 3A சித்தியும் மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தையும் தேசிய ரீதியில் நான்காம் இடத்தையும் பெற்று யாழ்.இந்துக் கல்லூரிக்கும் எமது சங்கத்திற்கும் பெருமை சேர்த்தமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பணியாளர்கள்**
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்(வ-து)
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்

(CR/44887) J-1



# பஹல்கம் தாக்குதலில்
# உயிரிழந்தோருக்கு யாழில் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 2

இந்தியாவின் ஜம்மு - காஷ்மீர் பஹல்கம் பகுதியில் அண்மையில் பொதுமக்கள் மீது மிலேச்சத்தனமாக நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்டோருக்கு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இந்தியத் துணைத்தூதரகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்றார்.

அத்துடன் இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், மதத் தலைவர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி தெரிவிக்கையில்,

உயிரிழந்த உறவுகளின் உறவினர்களுக்கு யாழ் இந்தியத் துணைதூதரகம் தனது அஞ்சலியைப் பதிவுசெய்கின்றது. பயங்கரவாதம் எதற்கும் தீர்வு அல்ல. நாம் பயங்கரவாத நிலைப்பாட்டை ஒற்றுமையுடன் எதிர்க்கவேண்டும். மனிதநேய விழுமியங்களை வளர்க்கவேண்டும். இந்திய அரசு பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தடுக்கத் தொடர்ந்து பாடுபடும் - என்றார்.

(ச-125,20)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 2

கொக்குவில் கிழக்கு காட்டுப்புலம் முருக மூர்த்தி கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த மாதம் 24 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை பி.ப 5 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையைத் தொடர்ந்து வேல்முருகன் வீதி உலா வருவார். நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் சங்காபிஷேகம் இடம்பெறும். அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து திருக்கல்யா ணம் நடைபெறும்.

(ச-25)

## கேள்வி அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேசசபை
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதி (PSDG) மற்றும் சபைநிதி வேலைத்திட்டங்கள்
## கட்டம் III - 2025

1. சாவகச்சேரி பிரதேசசபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளரிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் கேள்விகளை கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு. இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. விலைக்கேள்வியாளர்கள் பொது கொன்றாக் சட்டம் 1987 இல 03 ன் பிரகாரம் பதிவினை மேற்கொண்டிருக்க வேண்டும்.
4. தகைமை பற்றிய தகவல்கள் பெறுகை ஆவணத்தின வகுதி 4 ல் குறிப்பிடப்பட்டுள்ளனதோடு. மேலதிக தகைமைத் தேவைகளிற்கான வேலைகளுக்கு SBD 3 ற்கமைவாக பெறுகை ஆவணத்தின் அட்டவணை (Schedule -5) வகுதி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதிசேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவை கோர முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியிலுள்ள சாவகச்சேரி பிரதேசசபையில் (தொலைபேசி : 021-2050348. 0212050356 தொலைநகல் : 021-2050348) மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2025.05.02 தொடக்கம் 2025.05.21 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணி முதல் 15:00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை உள்ளுராட்சி மன்ற பெறுகை குழு. சாவகச்சேரி பிரதேசசபை. A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 2025.05.02 ஆம் திகதியிலிருந்து 2025.05.21 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் ,டையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 3,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி. நகல்பிரதி என தனித்தனியாக உறைகளிட்டு தலைவர். உள்ளுராட்சிமன்ற பெறுகைக்குழு. சாவகச்சேரி பிரதேசசபை. A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2025.05.22 ஆம் திகதி மாலை 02:00 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அனைத்தும் அன்றையதினமே (2025.05.22) மாலை 2.00 மணிக்கு திறக்கப்படும். இதன்போது கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி (ஒருவர் மாத்திரம்) கலந்துகொள்ளமுடியும்.
9. கீழ் காட்டப்படும் கேள்விகள். கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து NP/14/41/(6)/2/PSDG/2025/02,04, 01,NP/14/41/(6)/2/C.F/2025/38-45 இலக்க வேலைகளுக்கு 77 நாட்கள் (2025.08.08) வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். கேள்வி பிணையானது அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் பிணைமுறி அல்லது எமது அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
11. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2025.05.14 திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| தொடர் இல | கேள்வி இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(6)/2/PSDG/2025/02 | பொன்னம்பலம் வீதி புனரமைப்பு மறவன்புலவு | PSDG | 5.93 | 63 | C7 or above (வீதி நிர்மாணம்) | 60,000.00 | 2025.05.22-2025.09.05 வரை |
| 02 | NP/14/41(6)/2/PSDG/2025/04 | எறியால் பிட்டி மயான புனரமைப்பு, கச்சாய் | PSDG | 1.27 | 63 | C8 or above (கட்டட நிர்மாணம்) | 13,000.00 | 2025.05.22-2025.09.05 வரை |
| 03 | NP/14/41(6)/2/MA/2025/01 | எழுதுமட்டுவாள் ஆயள்வேத வைத்தியசாலை புனரமைப்பு, எழுதுமட்டுவாள் | Maintain Activities | 1.69 | 63 | C8 or above (கட்டட நிர்மாணம்) | 17,000.00 | 2025.05.22-2025.09.05 வரை |
| 04 | NP/14/41(6)/2/C.F/2025/38,39,40 | 300 வீட்டுத்திட்ட 3வது குறுக்கு வீதி புனரமைப்பு, நாவற்குழி<br>பொன்னம்பலம் வீதி புனரமைப்பு மறவன்புலவு கட்டம் II<br>நாவற்குழி பாடசாலை வீதி புனரமைப்பு நாவற்குழி | சபை நிதி | 7.21 | 63 | C7 or above (வீதி நிர்மாணம்) | 73,000.00 | 2025.05.22-2025.09.05 வரை |
| 05 | NP/14/41(6)/2/C.F/2025/41,42,43 | சந்திரமௌலீசா பாடசாலை வீதி புனரமைப்பு மட்டுவில்<br>சரசாலை ஐயனார் 1வது குறுக்கு வீதி புனரமைப்பு மட்டுவில்<br>ஸ்ரீபாரதி பாடசாலை வீதி புனரமைப்பு கோயிலாமனை | சபை நிதி | 6.77 | 63 | C7 or above (வீதி நிர்மாணம்) | 68,000.00 | 2025.05.22-2025.09.05 வரை |
| 06 | NP/14/41(6)/2/C.F/2025/44,45 | பொது நூலக வீதி புனரமைப்பு, கைதடி<br>இந்தனை வீதி புனரமைப்பு, கைதடி | சபை நிதி | 4.95 | 63 | C8 or above (வீதி நிர்மாணம்) | 50,000.00 | 2025.05.22-2025.09.05 வரை |

2025.05.02
தலைவது.
உள்ளுராட்சிமன்ற பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேசசபை,

(CR/44896) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

## மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

**கலைப்பிரிவு**
பிரதீபன் சஜந்திகா 3ஏ, செல்வேந்திரன் மதுசா 3ஏ, சுதாகரன் டிலக்சிகா 3ஏ, உதயசூரியன் தஜிந்தினி 3ஏ, ஜெயராசா தமிழினி 3ஏ, ரமேஸ் தர்மிகா 3ஏ, பரமேஸ்வரன் டனுஜா 3ஏ, மனோகரன் அனோஜன் 2ஏபி, சிவானந்தன் அபினயா 2ஏபி, செல்வநாதன் அனோஜிகா ஏ2பி, திலகராசா தஸ்மிகா ஏ2பி, குணரத்தினம் வஜிதரா ஏ2பி, விஜயரூபன் அகல்யா ஏ2பி, சசிகுமார் விதுசன் ஏ2பி, தயாகரன் கேருசியா ஏ2பி, செந்தூரன் வரலக்சன் ஏபிசி, வசந்தரூபன் ஜீனுசா ஏபிசி, வசந்தரூபன் விதுசா 3பி, குலராஜசிங்கம் திலக்சியா 3பி, ஜெயரூபன் தேறுஜா 3பி, தங்கராசா வெண்ணிலா ஏபிஎஸ்

**உயிரியல் பிரிவு**
மதியழகன் சிந்துஜா பிசிஎஸ், சுதேஸ்வரன் யதுர்சிகா 3சி, சசீதரன் நிருசனா 3சி, குணசேகர் தர்மிகா 3சி

**இரண்டாவது முயற்சி**
அலெக்ஸ்சாண்டர் அபிநயா 2பிசி

**கணிதப்பிரிவு**
கனகராசா யகிதன் 3ஏ, பிரபாகரன் கீர்த்திகன் 3ஏ, ஸ்ரீஸ்கந்தராசா பார்கவி 3ஏ, சந்திரகுமார் பிரியந்தன் 2ஏசி, சிவரஞ்சன் தருண்ஜா 2ஏசி, பஞ்சலிங்கம் ஜனுசன் 2பிசி, மயூரன் சிந்துசன் 2பிசி, நடராசா கஜீவன் பி2சி, சுந்தரலிங்கம் பிரவீன் ஏ2எஸ்
குணசிங்கம் தேனுஜா 2பிசி

**வர்த்தகப் பிரிவு**
அருட்குமரன் ஆதீனா 2ஏசி, சிவகாந்தன் சிவநதி 2ஏசி, செல்வராசா சங்கவி 3பி

## வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி

**கலைப்பிரிவு**
செல்வி சசிகரன் ரோசிகா ஏ 2பி, செல்வி ஸ்ரீதரன் சியாலினி ஏ 2பி,

**வர்த்தகப் பிரிவு**
செல்வி அன்னராசா டயானிக்கா 2பி சி

## பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்

**வணிகப்பிரிவு**
ராமகிருஷ்ணன் உமாசங்கர் ஏபிசி

**கலைப்பிரிவு**
த.லோகிதா ஏ 2பி, ஞானசோதி வாசுகி 3பி

## பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடாசலை

**கலைப்பிரிவு**
ம.அர்ச்சனா 3ஏ, ம.அபினயா 3ஏ, கு.நீர்த்திகா 3ஏ, ம.காருண்யா 2ஏ பி, ர.கிஷானி 2ஏ பி, த.மதுஷா ஏ 2சி, தெ.மதீனா 2பி சி, தி.திஷாயினி ஏபிசி, தே.வினிஸ்ரா 2பி சி, வி.திவ்வியா 2பி சி, சி.மைதிலி பி 2சி

**கணித, விஞ்ஞானப் பிரிவு**
ய.கௌசிகா 2சி எஸ், கா.மேரிசுஜந்தா 2சி எஸ், ஜீ.கலைப்பிரியா சி 2எஸ்




## பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி 100% சித்தி

யாழ்ப்பாணம், மே 2
யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி நூறு சதவீத சித்தி வீதத்தை க.பொ.த உயர் தரப் பரீட்சையில் பதிவுசெய்துள்ளது. கலைப்பிரிவில் குறித்த கல்லூரியில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய நான்கு மாணவர்களும் 100 சதவீத சித்தியைப்பெற்றுள்ளனர்.
செல்வராசா யதுர்சன் ஏபிசி பெறுபேற்றுடன் மாவட்ட நிலையில் 398 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.



# அண்ணாவின் தியாகத்தால் உயர்நிலையை எட்டினேன்

## முதலிடம் பெற்ற ருக்சிகா உருக்கம்

வவுனியா, மே 2
வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் மாணவி சந்திரசேகரன் ருக்சிகா, 2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் உயிர் முறைமை தொழில்நுட்பப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார். அவர் தேசிய அளவில் 134ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.
இந்தச் சாதனை குறித்து ருக்சிகா கருத்துத் தெரிவிக்கையில், எனது வெற்றிக்கு பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது.
எனது தந்தை விவசாயம் செய்து வருகிறார். சாதாரண தரத்தில் கல்வியை நிறைவு செய்த தனது அண்ணன், நான் தொடர்ந்து படிக்க வேண்டும் என்பதற்காக வேலைக்குச் சென்று உதவினார். அண்ணா இல்லையெனில் நான் இந்த நிலையை அடைந்திருக்கமாட்டேன் - என்றார். (ச-18)

## மானிப்பாய் இந்துக் கல்லூரி

**உயிரியல் அறிவியல்**
ரவீந்திரன் ஹரிஹரன் 3சி, நவரட்ணராஜா வேணுகானன் 2சிஎஸ், செந்திச்செல்வன் சேதுசன் 2சிஎஸ், ரட்னராஜா தனேசன் 2சிஎஸ், ஜேசுதாசன் அஸ்வின் 2சிஎஸ்

**இயற்பியல் அறிவியல்**
நவரத்தினராசா அருண்ராஜ் 3ஏ, தவநேசன் கிருஷ்காந்த் 2ஏபி, ராகுலன் லக்சிஹான் 2ஏபி, சிவகுமார் கிஷோர் 3சி

**கலைப்பிரிவு**
சிரிதரன் சிபிராஜ் 3ஏ, சந்திரகுமார் டினுசன் 3ஏ, மாணிக்கவேல் பிராகாஷ் 2ஏபி, அன்பழகன் அனோஜன் ஏபிசி, பாஸ்கரன் சஞ்சய் ஏ2சி, தவநாதன் தனுஜன் பி2சி, மதிமுகராசா தினிஸ்ரன் ஏ2சி, பிரேம்னாசீர் ஜதுசன் பி2சி, விமலேஸ்வரன் தனுசுயன் பி2சி, பாலகிருஷ்ணன் நவரோஜ் பி2சி, இராசமஜில் கிஷான் 2பிஎஸ், தெய்வேந்திரராசன் பவித் 3சி, பத்மநாதன் நிர்மலதாஸ் 2சிஎஸ், சிவசக்திநாதன் கஜீதரன் 2சிஎஸ், செல்வகுமார் டினுஷன் 2சிஎஸ், திருக்குமார் இந்துஜன் பி2எஸ்

**உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பம்**
குகரூபன் லிங்காரூபன் பி2சி

**பொறியியல் தொழில்நுட்பம்**
விசயராசா அன்ரனி சுவேந்தன் 2பிசி, கிருஷ்ணகுமார் ஜதுசன் 3சி

அல்லாதவர்
இந்திரராஜா அபுஷ்சியான் பிசிஎஸ், சுரேஸ்குமார் ராகவன் 2சிஎஸ்

**வர்த்தகப்பிரிவு**
ஜெபச்செல்வன் ரிஷித் பிரான்சிஸ் ஏ2பி, சசிகரன் லெகான் ஏபிசி, ஜெகமதன் ஜனுஷன் 2சிஎஸ்

## வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

**கணிதப் பிரிவு**
அன்ரன் தேவராஜன் தேனுஜன் ஏ2பி, வரதராசா தர்சிகன் ஏபிசி, உதயகுமாரன் தினேஷ் 2பிசி, வடிவேல் விக்னேஷ் பி2சி, கிருஷ்ணதேவன் ரவிந் பிசிஎஸ், சிறிரங்கநாதன் தனுசன் 3சி

**உயிரியல் பிரிவு**
சிவபாலன் நந்தசுந்தரன் 3சி

**வணிகப் பிரிவு**
அபிநயா செந்தில்வேல் 3ஏ, கிஷானி ரங்கநாதன் பி2சி, சோபிகா இலங்கேஷ்வரன் பி2சி, ஜருணா விஜயசிறி 3சி

**கலைப்பிரிவு**
தனுஷா முருகையா 3ஏ, நாகைமதி தினேஷ்குமார் 2ஏசி, சிவனியா சிறிதரன் 3பி, சந்தியா கண்ணதாசன் ஏபிசி, சிறி அருளானந்தராசா கண்ணதாசன் 2பிசி, கிஷானி யோகேந்திரன் ஏபிஎஸ், ஞானேஷ்வரன் யதுசிகன் பி2சி, சிவகாமி சிவகுமார் பி2சி

**பொதுப் பிரிவு**
புவிதா மகேந்திரராஜா பி2எஸ்

**உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு**

பவித்திரா பரிபூரணா ஆனந்தம் 2பிசி, குயின்சியா மகேஷ்வரன் 2பி சி, கஷ்வினி சுதர்சன் பி2சி, ஜோன் ஒலிவர் ஜெனிபா பிசி எஸ், குகனேசன் விமலன் 2சி எஸ், விஜிந்தா தேவகுமார் 3சி, அபிநயா குலேந்திரன் சி 2எஸ்

**இயந்திரவியல் தொழில்நுட்ப பிரிவு**
அலெபேட் குணசூரியர் டிலக்சன் அருள்ராஜ ஏபிசி

## இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி

**உயிர்/கணிதப் பிரிவு**
ஜெயதாசன் ஜனவீப் கனிசியஸ் ஏபிசி, சிறீசங்கர் நிலுக்சன் ஏபிசி, தனிஸ்லாஸ் அபிஷர் ஏபிசி, பிரபாகரன் தேனுகன் ஏபிசி, அருமைநாயகம் டிலோஜன் ஏபிசி, மரியாதாஸ் சனோகிகன் 2பிசி, பீட்டர் ஜஸ்டின் கிருஷிகன் பியோ 3சி

**வர்த்தகப்பிரிவு**
குணராசா பிரகாசன் 3ஏ, கிருபாகரன் அபிஷேக் 3ஏ, குயின்டெய்ன் டொமினிக் ஜதுஷன் ஏ2பி, கொன்சலஸ் அபிலாஷ் ஏ2பி

**கலைப்பிரிவு**
கிங்ஸ்லி கில்மன் 3ஏ, ஜெகன் ஒஸ்டன் டிக்சன் ராய் 2ஏபி, சிமியோன் சிந்துஜன் 2ஏபி, சுரேஷ்குமார் டயஸ் ஏ2பி, ஜேசுதாஸ் அலெக்ஸ்ராஜ் ஏ2பி, தயாபரன் சாருயன் ஏ2பி, நீகன் சஞ்சய் 2பிசி, குகேந்திரன் பிரதீபன் ஏபிசி, லோரன்ஸ் நியூட்டன் அமலநிதுசன் 3பி, ஸ்ரீமுரளிதரன் ஜபேஷ் ஏ2சி, அன்ரன் பாலதாஸ்மதுசன்ஏ2சி(ச-27159,125,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திக்கத்தில்...

படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் அல்வாய் வடக்கு ஜே/400 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட திக்கம் பகுதியில் 33 குடும்பங்களுக்கான 14.5 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கான உரிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிக விரைவில் அந்தக் காணிகள் விடுவிக்கப்படும். இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி என்னிடம் உறுதியளித்துள்ளார் - என்றார். (அ-ம-125)

## கடற்...

எந்தக் காரணமும் இல்லாமல் கைது செய்துள்ளனர். அவர்களின் படகுகளும் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளன. கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடமுடியாதவாறு இவ்வாறான நெருக்கடிகள் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன. இந்த விடயத்தில் அதிகாரிகள் தலையிட்டு எமக்குத் தீர்வொன்று வழங்கவேண்டும். பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மீனவர்கள் மூவரும் உடன் விடுவிக்கப்படவேண்டும் - என்றனர். (அ-ம-26)

## காணி...

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பொதுமக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு சட்டத்தரணி சுமந்திரன் தலைமையில் ஏழு சட்டத்தரணிகள் முன்வந்துள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்ததாவது:-

காணிச் சுவீகரிப்புத் தொடர்பான அறிவித்தல், 2430 இலக்கமிட்ட வர்த்தமானியில் (ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் மட்டும்) காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் பிரசுரமாகியுள்ளது. எனவே, அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்ட உதவியை நாடவேண்டிய பொதுமக்கள், இன்று காலை 10 மணியளவில் வெற்றிலைக் கேணிக்கு வருகைதந்து சட்டத்தரணிகளின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (அ-ம-26)

## அரசாங்கத்...

விடுத்துள்ளார். தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் மேதினக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே சஜித் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தாம் ஆட்சிக்கு வந்தால் மின்சாரக் கட்டணம் 33 சதவீதம் குறைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி உறுதியளித்தது. ஆனால் தேர்தல் முடிவடைந்த பின்னர் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்குரிய முயற்சிதான் எடுக்கப்படுகின்றது எனத் தகவல் கிடைத்துள்ளது. உரமானியம், நிவாரணம் உள்ளிட்ட விடயங்களிலும் வழங்கிய வாக்குறுதிகள் ஒன்று, நடைபெறுபவை வேறொன்றாகவே அமைந்துள்ளது. எனவே, இந்த அரசாங்கத்துக்கு மக்கள் சிவப்பு எச்சரிக்கையை விடுக்கவேண்டும். அதற்காக இந்தத் தேர்தலை பயன்படுத்தவேண்டும். நாட்டில் இன்று சட்டம், ஒழுங்கு இல்லை. பாதாளக்குழுக்கள் சட்டத்தைக் கையிலெடுத்துள்ளன. நல்லாட்சிக்குப் பதிலாக காட்டாட்சியே நிலவுகின்றது - என்றார். (அ-ம-44)

# ஐ.எம்.எப். நிபந்தனைகளை மறைக்கின்றது அரசாங்கம்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, மே 2**

**சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுவார்த்தைகளின் மிக முக்கிய உண்மைகளை அரசாங்கம் மறைத்திருக்கின்றது. மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் மட்டுமே அடுத்த கட்ட கடன்தொகை வழங்கப்படும் என்ற அதன் நிபந்தனையை ஏன் அரசாங்கம் மக்களிடம் மறைத்துள்ளது?**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கப்படும் நிபந்தனைகளை அரசாங்கம் நாட்டு மக்களிடமிருந்து மறைக்கிறது.

மின்சாரக்கட்டணம் அதிகரிக்கப்பட்டால் மட்டுமே அடுத்த நிதி வழங்கப்படும் என்று நாணயநிதியம் முன்வைத்துள்ள நிபந்தனை தொடர்பில் அரசாங்கம் எதுவும் கூறவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாணயநிதியத்துடன் பயணத்தை தொடரமாட்டோம் என்று கூறினார்.

பொய் கூறவேண்டாம் என்று நான் அப்போது அவர்களிடம் கூறினேன். நிச்சயம் நாணயநிதியத்துடன் பயணிக்கவேண்டும் என்பது எனக்குத் தெரியும் - என்றார். (எ-இ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்...

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்ததாவது:-
தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் காங்கேசன்துறை மேற்கு ஜே/233 கிராம அலுவலர் பிரிவு மாங்கொல்லை கிராமத்தில் 15.13 ஏக்கர் காணிகள் விடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் காங்கேசன்துறை மேற்கில் தனியார் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளன. வயாவிளான் கிழக்கு ஜே/244 கிராம அலுவலர் பிரிவில் ஒட்டகப்புலம் கிராமத்தில் 20 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கற்கோவளம் கிராமத்தில் 5.57 ஏக்கர் காணிகள் விடுக்கப்பட்டுள்ளன.
மாங்கொல்லை கிராமத்தில் 47 குடும்பங்களும், ஒட்டகப்புலம் கிராமத்தில் 52 குடும்பங்களும், கற்கோவளம் கிராமத்தில் 3 குடும்பங்களும் இந்தக் காணிகளைப் பொறுப்பேற்கவுள்ளன.
விடுவிக்கப்பட்ட காணிகளில் கண்ணிவெடிகள் தொடர்பான பரிசீலனைகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், விடுவிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றார்.
காணிகள் விடுவிக்கப்பட்டமை தொடர்பான சான்றுப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலாளர் க.ஸ்ரீமோகனன், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் திருமதி சி.சுதீஸ்னர் மற்றும் பருத்தித்துறைப் பிரதேதச செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
(அ-ம-26-125-66)

## தமிழர்களின்...

குரிய நேசக்கரத்தை தமிழ் மக்கள் நீட்டியுள்ளனர். அவர்களை ஒருபோதும் கைவிடக்கூடாது. எனவே, தமிழர்களின் அனைத்துவித உரிமைகளும் உறுதிப்படுத்தப்படும் - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.
தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி அநுர இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அத்திபாரம் இல்லாத நாடொன்றே எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. எனவே, முன்னோக்கிச் செல்வதற்கு வலுவான அத்திபாரம் அவசியம். அதற்கான முழு முயற்சியும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. ஊழல் அற்ற ஆட்சி நடக்கின்றது.
அதேபோல தேசிய ஒற்றுமை எமக்கு மிக முக்கியம். தேசிய இனங்களுக்கு இடையில் ஒற்றுமை இல்லாமல் முன்னோக்கிச் செல்லமுடியாது. கடந்த தேர்தலின்போது தேசிய ஒற்றுமைக்கான பயணத்தில் எம்மைவிட வேகமான ஓர் அடியை தமிழ் மக்கள் முன்வைத்தனர். வடக்கு, கிழக்கில் நாம் குறைந்தளவிலேயே அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோம். தமிழ்மொழியிலான முழுமையான தொடர்பாடலும் இருக்கவில்லை. அப்படியிருந்தும் வடக்கில் இருந்த பாரம்பரிய கட்சிகள் மற்றும் தலைவர்களை நிராகரித்து எம்மீது மக்கள் நம்பிக்கை வைத்தனர். இது எதனை வெளிப்படுத்துகின்றது? தேசிய ஒற்றுமைக்கான தேவையே அது.
எனவே, தமிழ் மக்கள் முன்நோக்கி வைத்த காலை நாம் பின்நோக்கு எடுக்கும் வகையில் செயற்படக்கூடாது. அவர்களின் கலாசார உரிமை, மொழி உரிமை, பாரம்பரிய காணி உரிமை, இலங்கை பிரஜைகளாக வாழ்வதற்குள்ள அனைத்து அடிப்படை உரிமைகளும் உறுதிப்படுத்தப்படும். நாட்டை மீட்பதற்கான இரண்டாம் கட்ட நடவடிக்கைதான் இது. இதனைச் செய்யாமல் நாட்டை மீட்டெடுப்பது பற்றி சிந்திக்க முடியாது. பிரித்தாளும் அரசியலை தோற்கடித்து ஒற்றுமைக்கான அரசியலை மக்கள் வெற்றிபெற வைத்துள்ளனர் - என்றார். (அ-ம-44)

## சஜித்...

அதற்கு மலையக மக்கள் ஆதரவாக நிற்பார்கள் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.
தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா வழங்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இ.தொ.கா.வினருடன் இணைந்து அறிவித்தார். ஆனால் இதுவரையில் ஆயிரத்து 700 ரூபா கிடைக்கவில்லை. இந்த நிலையில் ஆயிரத்து 700 ரூபா பற்றி பேசப்படும் என தற்போதைய ஜனாதிபதி கூறுகின்றார். அது எப்போது கைகூடும் என்பது தெரியவில்லை. இன்று பொருள்களின் விலைகள் எகிறியுள்ளன. இதனால் தோட்டத் தொழிலாளர்களால் தமது வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.
கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது நுவரெலியா மாவட்ட மக்கள் சஜித் பிறேமதாசவுக்கு பேராதரவு வழங்கினார்கள். நாம் என்றும் மக்களுடன்தான் இருப்போம். மலையக மக்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகம் பேசினார். ஆனால் எதுவும் நடக்கவில்லை. உகண்டாவில் உள்ள ராஜபக்சக்களின் பணம் கொண்டுவரப்படும் என்றார்கள். அதுவும் நடக்கவில்லை. தேர்தல் நெருங்கும்வேளை ஏமாற்றுவித்தையாக எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது' - என்றார். (அ-ம-44)

## தமிழ்த்...

நிகழ்வுகள், நெல்லியடி மாலுசந்தியில் நேற்று நடைபெற்றன. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சித் தேர்தலில் நாங்கள் சரியானவர்களை சரியான நேரத்தில் தேர்ந்தெடுக்க வேண்டும். காலம்காலமாக வாக்களித்துப் பழகிவிட்டோம் என்பதற்காக எங்களின் வாக்குகளைப் பயன்படுத்த முடியாது. இன்று தமிழ்த் தேசியத்தைத் தொடர்ந்தும் உயிர்ப்புடன் கொண்டு செல்பவர்கள் யார்? தமிழ்த் தேசியப் பேரவையின் பயணம் மட்டுமே தேசியத்தின் பாதையில் அமைந்துள்ளது. நான் முன்னர் இருந்த தமிழரசுக் கட்சி தனியொருவரின் தான்தோன்றித்தனமான செயற்பாட்டால், பலகூறுகளாக உடைந்துள்ளது. அந்தக் கட்சிக்காகத் தம்மை அர்ப்பணித்த பலர் வெளியேறிவிட்டனர். கொள்கை ரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் இன்று நிலையான தரப்பு என்றால், அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ்த் தேசியப் பேரவையும் மட்டும்தான். ஆதலால், சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை மக்கள் வெற்றிபெறச் செய்ய வேண்டும்.
தேசிய மக்கள் சக்தியினரின் எம்.பி.க்கள் அனைவரும் ஆளுமையற்றவர்களாகவே காணப்படுகின்றனர். ஓர் அபிவிருத்திக் கூட்டத்தைக்கூட சரியான முறையில் நடத்தமுடியாது திண்டாடுகின்றனர். எம்.பி.க்களை விடவும் மிகமோசமான வகையில்தான் கடற்றொழில் அமைச்சரின் செயற்பாடு உள்ளது. தமிழர்களுக்கு உரிமையைத் தரப்போவதாகக் கூறிக்கொள்ளும் தேசிய மக்கள் சக்தியினர் எதற்காக வடக்கு - கிழக்கைப் பிரித்தனர். அரசியலமைப்பு விடயத்திலும் பின்னிற்கின்றார்கள். தேர்தல் பரப்பில் இன்று போலியான வாக்குறுதிகள்தான் எஞ்சிநிற்கின்றன. ஆதலால்தான் கூறுகின்றேன், தேசியத்தின்பால் பயணிக்கும் தமிழ்த் தேசியப் பேரவையை மக்கள் பலப்படுத்தவேண்டும் - என்றார்.
(அ-ம-125)

## தேர்தல்...

தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி அதிகார சபைகள் இருக்கின்றன. ஒரு மாநகரசபை, 3 நகரசபைகள் மற்றும் 13 பிரதேசசபைகள் என்ற கட்டமைப்பில் உள்ளூர் அதிகாரசபைகள் இருக்கின்றன. குறித்த சபைகளில் உள்ள 243 வட்டாரங்களில் இருந்து உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 3 ஆயிரத்து 519 வேட்பாளர்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைச் குழுக்களிலிருந்து போட்டியிடுகின்றனர்.
யாழ் மாவட்டத்தில் மக்கள் தமது வாக்குகளை அளிப்பதற்காக 517 வாக்களிப்பு நிலையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பிரதேச செயலாளர்களுக்கும் கிராம அலுவலர்களுக்கும் இந்த வாக்களிப்பு நிலையங்களை தயார்ப்படுத்தவதற்கான முழுமையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதேநேரம் 4 இலட்சத்து 98 ஆயிரத்து 140 வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர். அத்துடன் தேர்தல் கடமைகளுக்காக 6 ஆயிரத்து 320 அதிகாரிகளும் ஆயிரத்து 48 பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.
மே மாதம் 5 ஆம் திகதி காலை 8 மணி முதல் யாழ் மத்திய கல்லூரியில் இருந்து வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுகள் உள்ளிட்ட ஆவணங்களை பேருந்துகள் மூலமாக குறித்த வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டுசெல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேநேரம் யாழ். மாவட்டத்தில் 243 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் தேர்தலுக்கான இணைப்பு அலுவலகங்களாக பிரதேச செயலகங்கள் செயற்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டள்ளன.

**விசேட போக்குவரத்து**

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை போக்குவரத்து சபையின் 50 பேருந்துகளும், தனியாரின் 143 பேருந்துகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதேவேளை பருத்தித்துறைப் பிரதேசத்தில் உள்ள இடம்பெயர்ந்தவர்களை ஏற்றி வருதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று தீவக போக்குவரத்துத் தொடர்பாக குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கு கடற்படைத் தளபதியிடம் கலந்துரையாடி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**தேர்தல் முறைப்பாடுகள்**


இதுவரை காலமும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலே 94 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக 4 வன்முறைச் சம்பவங்களும், 90 சட்ட விரோத மீறல்களும் இடம்பெற்றுள்ளதுடன் அவை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன - என்றார்.
(அ-ம-26-125)

## நல்லை...

அவரின் புகழுடல் கொழும்பிலிருந்து இன்று எடுத்துவரப்பட்டு, இன்றைய தினமே இறுதிக் கிரியைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
(அ-ம-சி-66)

## பொறுப்புடன்...

படுத்தப்பட்டுள்ளன. இம் மாதம் 6ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், குறித்த சுவரொட்டிகள் பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளன. யாழ்ப்பாண கல்விச் சமூகம் என்ற பெயரில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடி இனி இருக்காது

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, மே 2

கோட்டும் சூட்டும் அணிந்தவர்கள் தேசிய மட்டத்தில் பெரியளவில் கொள்ளையடிக்கிறார்கள். உள்ளூராட்சிசபைகளில் அவ்வாறு கொள்ளையடிக்கமுடியாது; இனிமேல் இதற்கு இடமில்லை. நாம் ஒருபோதும் ஊழலை அனுமதிக்கப்போவதில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரியா தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைக் கூ ட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ச-41-6)



# வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்கள் சேகரிப்புக் கூடைகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே2

பிளாஸ்ரிக் போத்தல்களால் சூழல் மாசடைவதைத் தடுப்பதற்காக வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்களைச் சேகரிக்கும் 18 கூடைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து சேவ் எ லைப் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் க. இராகுலனால் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் கையளிக்கப்பட்டன. வெற்றுப் பிளாஸ்டிக்போத்தல்களால் கூடுநிரம்பியவுடன் அதனைக் குறித்த நிறுவனம் மீள்ச் சுழற்சிக்காக எடுத்துச்செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-22,66,9)


## மலிவு விற்பனையில் கோழிகள், முட்டைகள் விற்பனைக்கு உண்டு

**35 வருட பூர்த்தியை முன்னிட்டு வாடிக்கையாளர் நலன் கருதி எமது நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் ஒரே விலையில் எல்லாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.**

**02.05.2025 இன்றைய விலை விபரம்**

சுத்தம் செய்யப்பட்ட புறோயிலர் இறைச்சி 1Kg-850/=
உயிர் நிறை 1Kg-550/=
1முட்டை-27/=

**இவை அனைத்தும் 24 மணி நேரமும் எமது கடைகளில் பெற்றுக் கொள்ள முடியும்**

கிளை- நியூ சிற்றி கோழிக்கடை பொம்மை வெளி, காரைநகர் பிரதான வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
கிளை- நியூ சிற்றி கோழிக்கடை ராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
கிளை- நியூ சிற்றி கோழிக்கடை உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற் வீதி, உரும்பிராய் கிழக்கு, யாழ்ப்பாணம்.
எமது தலைமைக் காரியாலயம் நியூ சிற்றி பாம், நியூ சிற்றி கோழிக்கடை இல.8, 4ம் குறுக்குத்தெரு, குருநகர் சந்தைக்கு முன்பாக, யாழ்ப்பாணம்.




# தேர்தல் ஒழுங்குபடுத்தல் முன்னாயத்தச் செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 2

உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு வட்டார உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டப் பதில் செயலரும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணல் நிலையங்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக மாவட்டச் சமுர்த்திப் பணிப்பாளரும், போக்குவரத்து ஒழுங்குகளுக்குப் பொறுப்பாகவுள்ள மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான எவ்.சி.சத்தியசோதியால் தெளிவுபடுத்தப்பட்டதுடன் தேர்தல் கட்டுப்பாட்டுப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பில் யாழ்.மாவட்டப் பிரதம உள்ளக கணக்காய்வாளரும், கட்டுப்பாட்டுப் பிரிவின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ்.ரமேஷ்குமாரால் விளக்கமளிக்கப்பட்டது.

(ச- 125,66)




ஆர்வமும் திறமையும் கொண்டவரா நீங்கள்? இது உங்களுக்கான வாய்ப்பு!

- **RECEPTIONIST**
  வரவேற்பாளர்
- **VIDEO EDITOR**
  **GRAPHIC DESIGNER**
  Video Editing & Photoshop போன்றவற்றில் அடிப்படை அறிவு போதுமானது.
- **ANCHOR**
  **VOICE ARTIST**
  செய்திகளுக்குக் குரல் கொடுப்பதற்கும், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கவும் கூடிய குரல்வளம் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- **REPOTER**
  **SUB EDITOR**
  களச் செய்திச் சேகரிப்பு, இணையத்தள செய்திப் பதிவேற்றத்தில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- படிக்க விரும்புபவர்களுக்கும் வாய்ப்பு.
- திறமையும், ஆர்வமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

LOCATION

**நேர்முகத் திகதி: 03.05.2025 (சனிக்கிழமை)**
**நேரம்: காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை**
**இடம்: 'உதயன்' அலுவலகம். 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# 2 பேருந்துகள் கோரவிபத்து: இருவர் பலி: 40 பேர் காயம்

மின்னேரியாவில் இரு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்ததுடன், 40 பேர் காயமடைந்துள்ளனர்.

ஹபரனை பொலன்னறுவை பிரதான வீதியில் மின்னேரிய, மினிஹிரிகம பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பு மற்றும் பொலன்னறுவைக்கு இடையே பயணித்துக் கொண்டிருந்த இரு தனியார் பேருந்துகளே இவ்வாறு விபத்துக்குளாகியுள்ளன. விபத்தில் காயமடைந்தவர்கள் பொலன்னறுவை மற்றும் ஹிங்குரங்கொட வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... 02.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.